ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௬	மெய்கண்டான் யாண்டு-௭௱௫ தைத்திங்கள் 1928 ௵ ஜனவரி—பிப்ரவரி ௴	பரல் ௧

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

திருச்சிற்றம்பலம்

நம் செல்வி

எல்லாம் வல்ல சிவபிரான் திருவருளால் நம் அருமைச் செந்தமிழ்ச் செல்வி கடந்த ஆண்டில் ௫-ம் சிலம்பு பெற்று அதன் அழகிய பன்னிரண்டு பரன்மணிகளாலும் அரும் பொருள் தழீஇய இன்னிசை இசைஇச், செந்தமிழ்ப் பெருமக்களின் உயர்ந்த நெஞ்ச அரங்கில், தன்னியலழகு கனிந்து கவினத் தலைசிறந்த தமிழாசிரியன்மார் புனைந்திட்ட பேரழகினைத் துளித்துச்சொட்டி அனநடை வாய்ந்து அசைந்தொல்கிப் பெருமை பெற்றமை தமிழன்பர்கள் எல்லாரும் அறிந்ததொன்று. இவ்வாண்டில் முன்னினுஞ் சிறந்த இவ்வாறுஞ்

சிலம்பினைப் பெறுகின்றமையால் நம் செல்வி இன்னுஞ் சிறப்ப நடம்புரிந்து வீறுமென்பதில் எட்டுணையும் ஐயமில்லைமாய் எம் பெருமான் ஆரருளைக் கோரி நிற்கின்றேம்.

இன்னும் நமது தென்னாட்டுத் தமிழ்ப் பெரும் புலவர்களும் அரும்பொருள் செறிந்த அழகிய தெளிதமிழ்க் கட்டுரைகளை மென்மேலும் எழுதியளித்தற்கு அருள் கூர்ந்திருக்கிறார்கள். அக்கட்டுரைகளையும் பிறமொழிக் கலப்பில்லாத தனித் தமிழிலேயே எழுதித்தர இசைந்துகொண்டமை தமிழ் மக்களால் எழுமையும் மறத்தற்கரிதாயிருக்கின்றது. தமிழ் மக்கள் இன்றியமையாது அறிந்து கொள்ளற்பாலனவாம் மொழி நூல்கள், சமய நூல்கள், தமிழ் மறைகள், ஆரிய மறைகள், புராண இதிகாச நூல்கள், அற நூல்கள், இயல்பொருணூல்கள், மருத்து நூல்கள், கோள் நூல்கள், வரலாற்று நூல்கள், மற்றும் பிற வெளியீட்டுக் கட்டுரைகள், இவற்றையெல்லாம் அறிந்து ஒழுகிய ஆன்றோர்கள் தமது வழக்கிற்கண்ட நுகர்ச்சியுண்மைகள், அவற்றினின்றும் எழுந்த ஐய வினாக்கள், அவைதம்மின் விடைகள், அறிவுரைகள், நாட்டுத் திருத்தங்கள், புதுக் கதைகள், மொழி பெயர்ப்புகள், பன்னூன் மதிப்புரைகள் முதலிய அரும்பெரும் பொருள்கள் பலவற்றின்மேலவாய் வரும் அக்கட்டுரைகள் மொழிப் பகுதி, சமயப் பகுதி, இயல் பொருட் பகுதி, மக்கட் பகுதி, பொதுப் பகுதி என்னும் ஐந்து நெறி முறையின்கண் இட்டடக்கி வகைப்படுத்து இச்சிலம்பில் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொருபரலின் ஈற்றிலும் பொருத்தப்படும் விளக்கப்படங்கள் கடந்த சிலம்பிற்போலாது இச்சிலம்பில் ஆப்டோன் படங்களாக விளங்கிக் கவின் காட்டும். இவ்வாண்டில் வரும் அப்படங்கள் பன்னிரண்டும் பன்னிரண்டு அகப்பொருட் காட்சிகளாக விளங்கும். ஆண்டுக்கு ஆண்டு நம் செல்வி உயர்வடைந்து வருகின்றது.

ஆதலின், நம் செல்வியின் முன்னேற்றங் கண்டு நம் அருமைக் கையொப்ப நண்பர்கள் ஒவ்வொருவரும் தமக்கு நண்பராவாரில் ஒவ்வொருவரைச் செல்வியின் கையொப்பக்காரர்களாகச் சேர்த்துத் தந்தாலும், செல்வி தமிழ் நாட்டில் அறிவு ஞாயிறென முழுதும் இலகும். அங்ஙனம் சேர்ப்பதற்கு இத் திங்களிலேயே முயன்று முடிப்பார்களானல், இதன் மறுஇதழை அ௰-பக்கமுள்ள டெம்மி ௫-பார இதழாக வெளிப்படுத்தக் கூடும்.

மக்களாய்ப் பிறந்தார் தம் அறியாமையை நீக்கிக்கொள்வதற்குக் கல்வியே தக்க கருவியாவதாம் என்பது நண்பர்கட்குப்

புதுக் கருத்தன்று. அக்கல்வியை ஒவ்வொருவரும் கற்றற்கு உளவாம் இடையூறுகளோ கணக்கில. அங்ஙனங் கற்றாலும் உயர்வும் உண்மையும் நுண்மையும் பொருந்திய திட்பக் கருத்துக்களைக் காண்டல் அரிதினும் அரிது. அதனினும் அறிவான் முதிர்ந்த பெரியார் பலரின் சீரிய கருத்துக்களை ஒருங்கே அறிதல் எளிதாவதொன்றன்று. ஆதலால், உயர்ந்த தமிழ்ப் பேராசிரியன்மார்கள் அல்லும் பகலும் அரும் பாடுபட்டு எண்ணில்லாத இடுக்கண்களினிடையே நெஞ்சும் மூளையுங் குழம்ப, இடையறாது வருந்திக் கற்று அவ்வாற்றால் தாம் அரிதின் கண்ட நூன்முடிபுகளையும் ஒழுக்கமுடிபுகளையும் உயிர்க்கு அழகு தரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக இரங்கி எழுதித் தருகின்றமையின், அவைதம்மை ஏற்று மக்கட்கு மிக்க பயனுடையவாய் வெளிப்படும் வெளியீடுகளை எளிதெனப் போற்றாது நிற்றல் அருமை அறியாதார் செய்கையாமன்றோ? கற்ற மக்கட்கே வெளியீடுகள் இன்றியமையாது வேண்டப்படுமானால் அங்ஙனம் வருந்திக் கற்றல் ஏலாத மற்ற மக்கட்கு அவைதாம் எத்துணை இன்றியமைதனவாகும் என்று கூறல் வேண்டுமோ! சமைத்துத் தந்த உணவுப்பண்டங்களென நம் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவரும் அறிஞர்கள் சமைத்தருளிய அரும்பொருட் கட்டுரைகளை இதுகாறும் நுகர்ந்துவரும் நண்பர்கட்கு ஈதொன்றுங் கூறல் வேண்டுவதில்லை.

உலகத்திலே ஒவ்வொருவரும் பிறருடைய அறியாமையைத் தொலைத்தற்கு எவ்வளவு தொலைவு அழுந்தி முயல்கின்றார்களோ அவ்வளவும் இறைவனுக்கு ஒய்வு தந்தது போலாம். அறியாமை யென்பது தமிழ் நாட்டினர்க்குத் தமிழ் மொழியினாலும் சைவ சமயத்தினாலுமே இரிந்து கெடும் ஆதலால், அவ்விரண்டினையும் உயர்ந்த முறையிற்கொண்டு வெளிவரும் நம் செந்தமிழ்ச் செல்வியை நாடெங்கும் பரப்புதலே இறைவன் குறிப்பொடு முழுதொத்து முதன் முதலிற் செயத்தக்க நாட்டுத் தொண்டாகுமென்பதில் ஐயமுமுண்டோ, நண்பர்களே! மொழித்தொண்டுமிது, சமயத்தொண்டுமிது: அல்லதூஉம் முப்பத்திரண்டு அறங்களினுஞ் சிறந்த அறத்தொண்டுமிது வென்று கருதுமின்கள்! கடவுட்டொண்டு மிதுவென்று கருதுதலில் இழுக்கொன்றுமில்லை. ஆகவே நம் கையொப்ப நண்பர்கள் இத்திங்களில் உடனே இத்தொண்டாற்றுவார்களாகவென எம் இறைவனிணையை எல்லும் அல்லும் இறைஞ்சுதும் பெரிதே!

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பதிற்றுப் பத்து

[திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் M. A. M. L.]

இது சேர அரசர் பதின்மர்களைப்பற்றிப் பத்துப் புலவர்கள் தனித்தனிப் பாடிய பப்பத்து அகவற் பாக்களின் றொகுதி.

முதற்பத்தின் பகுதிகள் தொல்காப்பிய உரையிலும் புறத்திரட்டென்னும் நூலிலும் எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டன. முழுவதுங் கிடைக்கவில்லை.

௨-ம் பத்து குமட்டூர்க் கண்ணனாரால் இயற்றப்பெற்றது. இதற்குத் தலைவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இவர் அந்தணரென்பது ஐஞ்ஞூறு ஊர் 'பிரமதாய' மாகப் பெற்றாரென்பதால் விளங்கும். கண்ணனாரென்னும் புலவரின் வேறு என்று குறித்தற்கு இவருடைய ஊர் இவரது பெயருக்கு அடைமொழியாகச் சேர்க்கப்பட்டது. இதனுள் இமயமலைச் சாரலில் ஆரியர் நெருங்கியிருந்தாரென்பதும், இமயத்திற்கும் குமரிக்கும் இடையிலுள்ள நாடுகளனைத்தையும் இமயவரம்பன் அரசாண்டானென்பதும், முருகக்கடவுள் யானையின்மேல் ஊர்ந்து வருவார் என்பதும் ஓதப்பெற்றன. பாரதப் போருள் அக்குரன் என்னும் வீரனது வலிமையும் சேரலாதனது வரையாது வழங்கும் வண்மையும் யவனர்களை இமயவரம்பன் வென்று வயிரம் பெற்றமையும் ஆகிய பல வரலாற்றுச் செய்திகள் அறியக்கிடக்கின்றன. இதனுள் ஒவ்வொரு பாட்டிற்கும் அதன்கணுள்ள சிறந்த சொற்றொடரை வைத்துப் பெயரமைக்கப் பட்டிருக்கிறது.

௨-ம் பத்து ௪-ம் பாட்டு 'நில நீர் வளி விசும்பு' என்று தொடங்குகின்றது. அதனுள் வீரராகிய சான்றோரைப் பாதுகாக்கும் திறமைபற்றிச் சான்றோர்மெய்ம்மறை யென்ற பெயர் அரசனுக்கு இடப்பட்டது. ஆதலின் இச்செய்யுளுக்குப் பெயர் 'சான்றோர் மெய்ம்மறை' யென்று ௨-ம் பத்தின் பதிக முடிபிற் கூறப்பட்டது. இங்ஙனம் பாட்டிற்குப் பெயரமைத்தல் புதிதாகத் தோன்றுகின்றது. பதிற்றுப்பத்தில் சிறப்பாகக் காணப்படுவதுயாதெனில்: புலவர்க்குக் கொடுத்த பெரும் பரிசிலாகும். ௨-ம் பத்துப் பாடியவர் ஐந்நூறு ஊர் 'பிரமதாய' மாகவும் முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டு வரும்படியில் ஒரு பகுதியும் பெற்றார்.

௩-ம் பத்துப் பாடிய பாலைக் கௌதமனார் இமயவரம்பன் றம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் மிகுந்த பொருள் பெற்று ஒன்பது பெரு வேள்வி வேட்டுப் பத்தாம் பெரு வேள்

வியில் வேள்வியின் பயனாகிய துறக்கத்தைத் தன் மனைவியோடு எய்தினானெனத் தெரிகின்றது. இதனுள் கொங்கு நாட்டைச் சேரர் கைப்பற்றியதும், உம்பற்காட்டைப், பாடப்பெற்ற மன்னன் தன் கைக்கீழ்க் கொண்டதும், அவன் முதியரைத் தழுவி அவருக்கு நிலம் வகுத்து ஈந்ததும், அயிரை யென்னும் கொற்றவை வணக்கம் நிகழ்த்தியதும், நெடும்பாரதாயனார் என்னும் பெரியோரைத் துணையாகக் கொண்டதும் பிறவும் கூறப் பட்டன.

௪-ம் பத்தைச் சேரலாதன் புதல்வன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடி நாற்பது நூறாயிரம் பொன்னும் அரசன் ஆண்டதில் ஒரு பாகமும் பெற்றாரென்று தெரிகிறது. இதனுள் திருமால் வணக்கம் முதற்கண் கூறப்பட்டது காண்க. பூழிநாட்டைப் படையெடுத்து நன்னனைச் செருவில் வென்றது இதன் பதிகத்துட் சுட்டப்பட்டது. அரசனது வண்மையும் வீரமும் மிகவும் நயமாகப் புனைந்துரைக்கப்பட்டன.

௫-ம் பத்துச் சேரன் செங்குட்டுவன்மீது பரணரால் பாடப் பெற்றது. உம்பர்க்காட்டு வருமபடியையும் அரசன் மகன் குட்டுவன் சேரலையும் பெற்றதாகத் தெரிகிறது. அரசன் தன் மகனையே பரிசிலாகக் கொடுத்தானென்பது வியக்கத்தக்கதாயிருக்கின்றது. இச்செங்குட்டுவனே கண்ணகிக்குக் கோயில் கட்டினவன். வடநாடு சென்று ஆரிய மன்னவரை வென்றவன். சோழர்குடியிற் சார்ந்த ௯-குறுநில மன்னரைச் செருவில் வென்றவன். இதனுள்ளும் இமயமும் குமரியும் இவன் நாட்டுக்கு எல்லை யென்று சுட்டப்பட்டன. இமயமலை சிவனார் வீற்றிருக்குமிடமாதலின், 'கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை' (௫, ௩: ௬) என்றனர். பகைவர் பெண்டிரது கூந்தலை அரிந்து திரித்த கயிற்றை யானைக்குப் பூட்டி இழுத்தல் அக்காலத்து வழக்காக இதனுட் காணப்படும். மோகூர்ப் பழையனை வென்றதன் செய்தியும் இதனுட் காணப்படுகின்றது.

௬-ம் பத்து: இது குடக்கோ நெடுஞ் சேரலாதன் புதல்வனுய்த் தொண்டி நகரத்தில் வீற்றிருந்த வானவரம்பன் என்னும் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடியது. இவர் பெண் புலவர். விருந்து வருவதைக் குறிப்பதற்குக் காக்கை கரைவதைச் சிறப்பித்துக் குறுந்தொகையிற் பாடிய காரணத்தால் இவர் காக்கை பாடினியார் எனப்பட்டார். இவர் பாட்டு புறநானூற்றிலும் வந்துள்ளது. இவர் அணிகட்காக ௯-துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசும் பெற்றதோடு அரசன் பக்கத்தில் வைகும் சிறப்பு

மடைந்தார். இதனுள் அரசனது போர் வீரமும், அவன் மழ வரை வென்றடைந்த கொற்றமும், படைச்சிறப்பும், அரண்களைக் கைப்பற்றும் ஆற்றலும் பிறவும் விரித்துரைக்கப் பட்டன. இமய மலையில் அரவின் மணிகள் நிறைந்திருப்பதும் அது வடக்கு எல்லை யென்பதும் விளக்கப் பெற்றது.

எ-ம் பத்து: செல்வக் கடுங்கோவாழியாதனைக் கபிலர் பாடி நூறாயிரம் பொற்காசும் நன்றாவென்னும் குன்றேறி நின்று கண்ணிற்கண்ட நாடனைத்தும் பெற்றனர். கடவுளுக்கும் பெரியோர்க்கும் அறவோர்க்கும் செய்ய வேண்டிய கடமையை அரசன் முடித்ததாகக் கூறப்பட்டது. அரசனது எயிலெடுக்கு மாற்றலையும் அவனது கற்புடைய மனைவியின் மாண்பையும் பாணர்க்கு வரையாது கொடுக்கும் வண்மையையும் யானைப் படையின் சிறப்பையும் இனிது மொழிந்தனர். குறிஞ்சியின் வனத்தைக் காட்டத் தேன் நிறை பலாப் பழத்தின் வளத்தையும் இழுமென இழிதரும் பறைக்குரல் அருவியின் சிறப்பையும் பிறவற்றையும் எடுத்துரைத்தனர். இவன் தன்னுடைய வேள்வித் தலைவனிலும் நன்றாக அறநெறி அறிந்தவனென்று கூறப் பட்டது.

அ-ம் பத்தினில் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறையின்மீது அரிசில் கிழார் என்பவர் பாடி ஒன்பது நூறாயிரம் பொற்காசும் அரசு கட்டிலையும் பெற்று அதை (அரசு கட்டில்) அரசற்குமீண்டு கொடுத்தார். இதனுள் இவனது வீரம் பல வகையாகப் பாராட்டப்பட்டது. அயிரை என்னும் கொற்றை வழிபாடுங் கூறப்பட்டது. தகடூரெறிந்த சிறப்பு பதிகத்துள் விளக்கப்பட்டது.

கூ-ம் பத்து: இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடி முப்பத்திரண்டாயிரம் பொன்காசும் மனை வளமும் ஊர் வளமும் நில வளமும் அணிகலச் சிறப்பும் அரசனால் அமைத்துக் கொடுக்கப்பெற்றார். இவ்வரசன் கோப் பெருஞ் சோழனையும் பழையன்மாறனையும் விச்சிக்கோ வென்பவனையும் வென்றனனென்றும் வஞ்சியைக் கைக்கொண்டானென்றும் வேள்வி வேட்டனனென்றும் கூறப்பட்டது. இதனுள் அரசனது வீரமும் வண்மையும் செங்கோன்மையும் பாராட்டப்பட்டன. விந்தாடவி யென்னுமிடம் கொற்றவைக்கு உரியதாகலின் 'கடவுட் பெயரியகானம்' (கூ : அ : உ) என்றார். கொங்கு நாட்டையும் பூழி நாட்டையும் இவ்வரசன் ஆண்டதாகக் கூறப்படுகின்றது.

ய-ம் பத்து கிடைத்திலது.

காஞ்சிப்புராண இன்கவித்திரட்டு

[ராவ்சாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் G. B. V. C.]

[௫-ம் சிலம்பின், ௨௮௪-ம் பக்கத்தொடர்ச்சி.]

பாலை

௧௧. குராஅ ளித்திடு பாவையைக் கோங்குபொன் கொடுத்துப்
பராரைப் பாடலம் பூந்தழற் பாங்கரின் மணப்ப
மராம ரத்துளர் வண்டுபண் பாடவல் முருங்கை
விராவு வெண்பொரி இறைத்திடும் வியப்பின தொருபால்.

(இ - ள்.) குரவ மரம் (ஆகியதாய்) ஈன்ற (பெண்போலும் வடிவமுள்ள பூவாகிய) பாவையை (க்கொள்ளுதற்குக்) கோங்க மரம் (ஆகிய மண மகன் பரியமாகத் தன் மஞ்சள் வருண மலராகிய) பொன் கொடுத்துப் பாதிரி மரத்தினது (தீப்போலச் சிவந்த) பூ (க் குவியல்) ஆகிய (ஓமத்) தீப்பக்கத்திலே மணஞ் செய்யாநிற்க, மரா மரத்தில் (மலர்களில்) மொய்த்த வண்டுகள் (ஆகிய பாடகர் மங்கலம்) பாட்டுப்பாட (க் கல்யாணச் சடங்கு நடத்துவிக்கும் புரோகிதனாகிய) முருங்கை மரங்கள் (தமது வெள்ளை நிறப பூக்களாகிய) வெண்பொரி தூவும் அதிசய (சம்பவ) ம் உடையது (பாலை நிலத்தில்) ஒரு பக்கம்.

பராரை - பருத்த அரை. அரை - மரத்தின் அடி தொடுத்துக் கவடு வரைக்குமான பாகம். அளித்தல் - ஈனுதல். பாடலம் - பாதிரி மரம். பூந்தழல் - பூவாகிய நெருப்பு. பாங்கர் - பக்கம். மணப்ப - மணக்க - கல்யாணம் செய்ய, பரிமளிக்க. உளர்தல் - மொய்த்தல். பண் - இசைப்பாட்டு. விராவி-விரவி - கலந்து. வியப்பு - அதிசயம். வியப்பினது - அதிசய முடையது. பால் - பக்கம்.

பாலைத்திணை வருணனை செய்யப் புகுந்த ஆசிரியர் இப் பாட்டில் எடுத்தாண்ட மரங்களெல்லாம் அத்திணைக்குரிய மரங் களாயிருத்தல் குறிக்கத்தக்கது. அம்மரங்களின் மலர்களினது வடிவ வண்ணங்கள் பற்றி மணவினை நிகழ்வதாகக் கற்பனை செய்த கவி சாதுரியம் கண்டு களிக்கத்தக்கது.

முல்லை

௧௨. கொல்லை எங்கணும் கொழுமலர் ததைபுன முருக்கில்
முல்லை மென்கொடி படர்ந்தலர் நிரைநிரை முகிழ்ப்ப,

அல்லை வென்றகந் தரப்பிரான் அரக்கெறி மார்பில்
தொல்லை வெண்டலை மாலிகை துயல்வரல் மானும்.

(இ - ள்.) (சிவந்த) மலர்கள் நெருங்கிய முருக்க மரத்தில் முல்லைக் கொடி படர்ந்து (வெண்மையான) பூக்கள் வரிசை வரிசையாகப் பூத்திருப்பது சிவபிரானது சிவந்த மார்பிலே வெண்தலைமாலை தொங்குதல் ஒக்கும். எ-று.

கொல்லை - முல்லை நிலம். எங்கணும் - எவ்விடத்தும். கொழுமை - செழுமை. தகைதல் - நெருங்குதல். புனம்-காடு. நிரை நிரை - வரிசை வரிசையாக. முகிழ்ப்பது துவ்விகுதி கெட்டு முகிழ்ப்ப என வந்தது, (கம்பரா. திரு அவ. கஉ-ல்) 'வருவதுபோல்' என்பது 'வருவபோல்' என வந்ததுபோல. முகிழ்த்தல் - அரும்புதல் - உண்டாகுதல். அல்-இருள். கந்தரம் - கழுத்து. அரக்கு - சிவப்பு. எறிதல் - வீசுதல். அரக்கு எறி - சிவப்பு (ஒளியை) வீசுகின்ற. தொல்லை - பழமை. மாலிகை - மாலை. துயல்வரல்-தொங்கல் (புறப்பொருள் வெண்பா மாலை), மானும் - ஒக்கும்.

முருக்கும் முல்லையும் முல்லைநிலப் பொருள்கள்

கங. பெண்ந லம்கனி இடைக்குலம் பிடிநடை மடவார்
விண்ந லம்கனி மாதரை எழிலினால் வென்று
பண்ந லம்கனி மிடற்றவர் பணைத்தமூக் கரிந்து
மண்ணில் எங்கணும் தூக்கிவைத் தெனக்குமிழ் மலரும்.

(இ - ள்.) இடைச்சியர் விண்ணாட்டு மாதரை அழகினால் வென்று (வென்றதற் கடையாளமாக அம்மாதரது) மூக்குக்களை அரிந்து எங்கும் தூக்கி வைத்ததுபோலக் குமிழ் மரங்கள் பூக்கள் பூத்திருக்கும்.

நலம் - அழகு. பிடி - பெண் யானை. எழில் - அழகு. பண் - இசைப் பாட்டு. மிடறு - தொண்டை. பணைத்தல் - பருத்தல்.

குமிழம் பூ மூக்குக்குவமை

இடைச்சியரும் குமிழும் முல்லை நிலப் பொருள்கள்

கச. கற்றை வார்குழல் ஆய்ச்சியர் கயல்விழி முகத்தின்
பெற்றி ஒப்புறப் பெருங்குருந் துச்சிமேல் தாவி
ஒற்றை மான்உடைக் கலைமதி அதன்நிழல் உறங்கும்
மற்றை மானையும் பற்றுவான் கதிர்க்கையால் வருடும்.

(இ - ள்.) இடைப் பெண்களது இரண்டு கண்களுடைய முகத்துக்கு (ப் பூரணமான) ஒப்புமையடைய (க் கருதி அவ் விரண்டு கண்களில் ஒரு கண்ணுக்குச் சமானமாக) ஒரு மானை யுடைய சந்திரன் (மற்றொரு கண்ணுக்குச் சமானமாக மற்றொரு மான் வேண்டி அதனைப் பெறும் பொருட்டு ஒரு) குருந்த மரத் துச்சிமேற் குதித்து (அங்கிருந்து கொண்டு) அம் மரத்தின் நிழ லில் உறங்குகின்ற மானைப் பற்றும்படி தன் கதிர்க்கையால் தடவுவான்.

கற்றை - மயிர்த்தொகுதி. வார் - நீளம். ஆய்ச்சியர் - இடைச்சியர். கயல் விழி - மீன் (போலும்) கண்கள். பெற்றி- தன்மை. உடை - உடைய. வருடல் - தடவல். வருடும் - தடவுவான்.

ஆசிரியர், ஒரு பெரிய குருந்த மரம் ஆகாயம் அளாவ மிக உயர்வாக வளர்ந்திருந்ததாகவும் அதன்மீது சந்திரன் விளங்கிய தாகவும், விளங்கியவன் அம் மரத்துச்சியிலே விண்ணின்று தாவி மேவினனாகவும், அவன் கரங்கள் (- கிரணங்கள்; கைகள்) அம் மரத்தடியிற் படுத்திருந்த ஒரு மான்மீது படிந்தனவாகவும் மனோ பாவனையில் தோன்றச் செய்து, அந்தத் தோற்றம், இடைப் பெண்களுடைய இரு கண்கள் விளங்கும் முகத்துக்கு உவமானமான சந்திரன், அவ்விரு கண்களில் ஒன்றுக்குச் சமானமாகத் தன்பால் (மான் வடிவம் போன்ற களங்கமாகிய) ஒரு மான் உள்ளது. ஆதலால் 'இப்போது அவர் முகத்துக்கு நாம் ஒரு புடை உவமையாகத்தானே உள்ளோம், இன்னும் ஒரு மானிருந்தால் முற்றுவமையாய் விடுவோமே' யென்று, அதனைப் பெறுதற்கு விரும்பித் தேடி, ஒரு மான் ஒரு குருந்த மரத்தடி யிற் படுத்திருக்கக்கண்டு, அதனைப்பற்ற அம் மரத்துச்சியுற்றுக், கரங்களை (- கைகளை, கிரணங்களை) நீட்டி அதனைத் தடவுதல் போலுமென்றார்.

இடைச்சியரும் குருந்த மரமும் மானும் முல்லை நிலப் பொருள்கள்.

பிழை திருத்தம்.

சிலம்பு-ரு, பக்கம் உஅஉ-சிலேவேல் என்பதை இலேவேல் என்று திருத்திக்கொள்க.

வடசொற் றமிழகராதி

[திருவளர் செல்வி. நாகை. நீலாம்பிகை அம்மையார்]

நார்த்விக் மகளிர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர்.

(ரு-ம் சிலம்பின், எகஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
ஆகமப் பிரமாணம்	உரையளவை
ஆகமம்	அறிவுநூல்
ஆகரம்	உறைவிடம்
ஆகருஷணம் ஆகருடணம் ஆகருடணை ஆகருஷித்தல்	அழைத்தல், இழுத்தல்
ஆகாங்கிசை ஆகாங்கிஷை	அவாய் நிலை
ஆகாசம்	வெளி, வான்
ஆகாசவாணி	வெளிச்சொல்
ஆகாத்தியம்	எதிரிடை, பொல்லாங்கு
ஆகாமியம்	தன்வினை
ஆகாயகமனம்	இடைவெளிச்செலவு
ஆகாயம்	வானம்
ஆகாரம்	உணவு
ஆகிருதி	உடல்
ஆகு	எலி
ஆகுகன்	மூத்த பிள்ளையார்
ஆகுதி	தீப்பெய்தல்
ஆகுலம்	ஆரவாரம், ஒலி, கலக்கம், வருத்தம்
ஆக்கியாபித்தல்	கட்டளையிடல்
ஆக்கிரகம்	கடுஞ்சினம்
ஆக்கிரகித்தல் ஆக்கிரமித்தல்	வலிமைகாட்டல்
ஆக்கிராணம்	மணத்தல், மூக்கு
ஆக்கிஞைசக்கரம்	ஆணை, செங்கோன்முறைமை
ஆங்காரம்	இறுமாப்பு
ஆசங்கித்தல்	ஐயங்கொளல்
ஆசங்கை	ஐயம்
ஆசமனம்	உட்கொள்ளல்
ஆசமித்தல்	குடித்தல்
ஆசயம்	இரைக்குடல், தங்குமிடம்
ஆசரணம் ஆசரணை	வழிபாடு

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
ஆசரித்தல்	பின்பற்றல்
ஆசனம்	இருக்கை
ஆசாடம் } ஆஷாடம் }	ஆடித்திங்கள்
ஆசாபாசம்	அவாக்கட்டு
ஆசாரம்	ஒழுங்கு, வழக்கம், வழிபாடு
ஆசாரி	கம்மாளன், குரு, பணிக்கன்
ஆசாரியன்	ஆசிரியன்
ஆசானுபாகு	முழந்தாள் நீள்கையன்
ஆசித்தல்	விரும்பல்
ஆசிப்பு	அவா
ஆசியம்	நகை, சிரிப்பு
ஆசிரமம்	பாழி, முனிவருறையுள்
ஆசிரயம்	இடம், கொள், கொம்பு, புகலிடம்
ஆசீர்வசனம் } ஆசீர்வதித்தல் }	வாழ்த்து
ஆசீவகர்	சமண முனிவர்
ஆசூசம்	தீட்டு
ஆசை	அன்பு, விருப்பம்
ஆசௌசம்	தீட்டு
ஆச்சரியம்	புதுமை, வியப்பு
ஆச்சியம்	நெய்
ஆச்சிரமம்	இலைக்குடில், பாழி, முனிவருறையுள்
ஆச்சிரயம்	அடுத்திருத்தல்
ஆஞ்ஞை	ஆணை
ஆட்சேபகம்	குற்றச்சாட்டு
ஆட்சேபம்	தடை
ஆதரம்	அன்பு, அவா
ஆதரவு	துணை, உதவி,
ஆதரிசனம்	கண்ணாடி
ஆதவம்	வெயில்
ஆதவன்	பகலவன், கதிரோன்
ஆதனம்	இருக்கை
ஆதாயம்	ஊதியம்
ஆதாரம்	அடி
ஆதானம்	ஏற்றுக்கொள்ளல்
ஆதி	முதல், பழமை
ஆதிக்கம்	உரிமை; முதன்மை
ஆதித்தன்	கதிரவன்
ஆதித்தியம்	விருந்தோம்பல்
ஆதிமூர்த்தி	கடவுள்
ஆதிமூலம்	கடவுள்
ஆதியந்தம்	அடிமுடி
ஆதீனம்	ஆளுகை

வடசொற்கள்	தமிழ்ச்சொற்கள்
ஆதூரம்	அவா
ஆதேயம்	தாங்கப்படுவது
ஆத்தன்	கடவுள், தோழன்
ஆஸ்தாநம்	
ஆஸ்தானம்	கொலு
ஆத்தானம்	
ஆஸ்தி	பொருள்
ஆஸ்திகன்	சடவுளுண்டென்போன்
ஆத்திரம்	
ஆத்திரவம்	விரைவு, பரபரப்பு
ஆத்திரியம்	
ஆத்தும சந்தேகம்	உள்ளையம்
ஆத்துமா	உயிர்
ஆத்துமார்த்தம்	தன் பொருட்டு
ஆபத்து	இடர்
ஆபரணம்	அணிகலம்
ஆபாசம்	கெடுதல், அருவருப்பு, பொய்,
ஆபானம்	கள்ளுக்கடை
ஆமலகம்	நெல்லி மரம்
ஆமிரம்	மாமரம், புளிப்பு
ஆமிலம்	
ஆமிலிகை	புளிப்பு
ஆம்பிரம்	
ஆயத்தம்	ஏற்பாடு
ஆயாசம்	இளைப்பு
ஆயாமம்	நிலம், அகலம்
ஆயு	ஆண்டு
ஆயுள்	
ஆயுதபாணி	படைக்கலக்கையன்
ஆயுதபூசை	படைக்கல வழிபாடு
ஆயுதம்	கருவி, படைக்கலம்
ஆயுருவேதம்	மருத்து நூல்
ஆயுர்வேதம்	
ஆரம்	பூமாலை
ஹாரம்	
ஆரம்பம்	துவக்கம்
ஆரம்பித்தல்	தொடங்கல்

(தொடரும்)

தமிழிலக்கண நூல்களுந் தமிழ் மாணவரும்

[சு. பெரியதம்பி யவர்கள்]

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.

திருவிளையாடற் புராணம்.

பண்டைக் காலந்தொட்டு இலக்கண வரம்புடைமை பற்றிச் சிறப்புற்று விளங்கிய நந் தமிழ்மொழி சின்னாளாய் இச்சிறப்புக் குன்றி வருவது தமிழ் மக்களெல்லார்க்குந் துன்பந்தருவதொன்றாம். இவ்வாறு நம்மொழிக்கு நேர்ந்த குறைக்கு ஏதுக்கள் பல உள. அவை மாணுக்கர்க்கு இலக்கணவறிவு புகட்டற்குக் கருவியாகத் தமிழ்ப் பாட சாலைகளினும் பிறவிடங்களினு மிக் காலத்து வழங்கு மிலக்கண நூல்களும், பொருள்களைச் செவ்வனே யாராய்ந்தெழுதப் படாமைபற்றிய ஏதுக்களாகும். ஆதலின் இலக்கண நூல்கள் மாணுக்கர்க் கையந்திரிபறப் பொருள்களை யறிவுறுத்தற்குத் தக்க கருவிகளாயமைந்திருத்தல் வேண்டும். மாணுக்கரெளிதிற் பொருளுணர்தற்கேற்ற உத்திகளைத் தழுவி நூல் செய்தல் இன்றியமையாதது. இது தான் கை கூடா விடினும் மாறுகொளக்கூறல், மயங்க வைத்தல், பொருள் நிரம்பாமை முதலிய குற்றங்களில்லாமல் நூல் செய்தல் கட்டாயமே.

இக்காலத்துள்ள நூல் சிலவற்றை நோக்குமிடத்து அவை கற்போர்க்கு இலக்கண வறிவு பிறப்பித்தற்குச் சிறந்த கருவிகளாயிருக்கவில்லை. இதை இங்குச் சிறிது விளக்குவாம்.

இந்நூல்கள் சிலவற்றை யாராயும்போது நூல்களையியற்றியவர் மயக்கமின்றித் தெளிந்தபின் அந்நூல்களை யெழுதினவர்போலத் தோன்றவில்லை. முன்னோர் சிலர் நுணுகியாராயாமலெழுதி வைத்த சிலவற்றை யிவரு மாராயாம லெழுதினார் போலத் தோன்றுகின்றது.

எடுத்துக்காட்டாக "எல்" "ஏனும்" "எனின்" "ஆயின்" என்பன வினையெச்ச விகுதிகளென்ற கொள்கையை யிங்குச் சிறிதாராய்வாம்.

மேற்குறித்த "எல்" முதலியவற்றை வினையெச்ச விகுதிக ளெனக்கொண்டு பலரும் பின்வருமாறு காட்டுவர்.

எல்-கண்டானேல், கண்டாளேல், கண்டாரேல்
ஏனும்-கண்டானேனும், கண்டாளேனும், கண்டாரேனும்
எனின்-கண்டானெனின், கண்டாளெனின், கண்டாரெனின்
ஆயின், கண்டானாயின், கண்டாளாயின், கண்டாராயின்.

"எல்" முதலியன வினையெச்ச விகுதிகளாயின் "கண்டானேல்" முதலியவற்றை வினையெச்சப் பகுபதங்களெனக் கோடல் வேண்டும். ஒவ்வோர் திணைபாலிடத்திற்கே யுரியவாய் நிற்கும் "கண்டானேல்" முதலியன வினையெச்சங்களாகு மெனின் வினையெச்சங்களெல்லாம் இருதிணை ஐம்பான் மூவிடத்திற்கு முரியவென்று தொல்காப்பியம், நன்னூல், இலக்கண விளக்கம் முதலிய இலக்கண நூல்களிலும் இவற்றிற்கெழுதிய உரைகளிலும் முழங்கும் கூற்றென்னாகும் !

இனி, "கண்டான்" முதலிய வினைமுற்றுக்களை யடுத்து வரும்போது "எல்" முதலியன வினையெச்ச விகுதிகளாயின், தம் பொருள் வேறுபடாமல் "அஃதேல் "அஃதேனும் "அஃதெனின்" "அஃதாயின்" எனப் பெயரையடுத்து வரும்போது இவற்றிற் கிலக்கணமென்னாகும் ! பெயரையடுத்து வருதலும் வினையையடுத்து வருதலுமாகிய இருநிலைக்கண்ணுந் தம்பொருள் வேறுபடாமல் வருமிச்சொற்களுக்கு இருநிலைக்கும் பொருந்தத் தமிழிலக்கண மரபழியாம லிலக்கணங் கூறலன்றோ சிறப்பு?

வினையெஞ்சி நிற்பதே வினையெச்சமெனின் வினைகொண்டு முடியும் வேற்றுமையில் வந்த பெயர்க்கண் அது மிகையாம். வினையெஞ்சி நிற்றலோடு காலமுங்காட்டுவது வினையெச்ச மெனின் "வந்தான் என" "வந்தான் என்று" (இவை வினைமுற்றுக்களை "என" "என்று" என்னும் இடைச் சொற்களடுத்து வந்த சொற்றொடர், நன்னூல், ௩௨௪) என்றற்றொடக்கத் தனவற்றின்கண் மிகையாம்.

"அவாவுண்டேலுண்டாம் சிறிது எனவரும் ஏல் என்பதும், அவனெள்ளுமேனும்வரும் எனவரும் ஏனும் என்பதும் வினையெச்சக் குறிப்புக்களாமெனக் கொள்க" என்பர் இலக்கண விளக்க நூலார். "ஏல்" என்பது "என்னில்" என்பதன் மரூஉ என்பர் வேறு சிலர்.

இனி "எனின்" "ஆயின்" என்பனவற்றைச் செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சமெனக் கோடலுமொன்று.

ஆயினும் இங்குக் குறித்த இரு நிலை வழக்கின் கண்ணும் "ஏல்" முதலியன இடைச் சொற்றன்மை யெய்தி நின்றன வெனக் கோடலே சிறப்புப்போலத் தோன்றுகின்றது. இதைத் தமிழ் வல்ல பெரியார் ஆராய்க.

தமிழ் மொழியைச் சீர்ப்படுத்தற்க ணிலக்கணத்திற் றிருத்தங்க ளேற்படுதல் குற்றமாகாது. ஆனால் தமிழிலக்கண வரம்பழித்தலே பயனாகப் புதுமதங்களை நாட்டத்துணிதல் பெருங் குற்றமாகும். வினையெச்சங்களெல்லாம் இருதிணை யைம்பான் மூவிடங்கட்கு முரியனவென்பது பழைய ஆசிரியர் பலர்க்கு மொப்பமுடிந்த முடிபாகவும், ஒவ்வோர் திணைபாலிடத்திற்கே யுரிய "கண்டானேல்" முதலியவற்றை வினையெச்ச மெனக் கோடல் தமிழிலக்கண வரம்பழித்தலாயே முடியும்.*

(இங்காராய்ச்சிக் கெடுத்துக்கொண்டன ஒரே பொருளைத் தந்து நிற்கும் "ஏல்" "எனின்" "ஆயின்" என்பனவும் "ஆயினும்" என்னும் பொருளில்வரும் "ஏனும்" என்பதுமே. பிற பொருளில் வரும்போது இவற்றிற்கிலக்கணம் வேறு என்பது உற்று நோக்கற்பாலது.)

திரு கு கதிரைவேற் பிள்ளையவர்க ளியற்றுவித்த தமிழ்ப் பெயரகராதியில் (சங்கப் பதிப்பு) இங்குச் சுட்டிய "ஏல்" முதலிய சொற்களுக்கெழுதிய விளக்கக்குறிப்புக்கள் மேற்காட்டிய வாறு பிழையாயிருந்தமைகண்டு கிறிஸ்தாப்தம் 1922-ம் ௵ ஜனவரித் திங்கள் வரையில் திருவாளர். அ. குமாரசாமிப் புலவர் களது கருத்தைக் கடித மூலமாய் வினவியபோது அவரும் அகராதி சரியாகத் தோன்றவில்லை யென்றே விடையிறுத்தார். தமிழ் மாணவர் துன்புற்றிரங்க இவ்வுலக வாழ்வை நீத்த நம் புலவர் பெருமானார் காய்தலுவத்த லகற்றி யாயு நெறியைக் கடைப் பிடித்த நல்லியல்பினர் என்பதற் கிதுவுமோர் சான்றாகும்.

---

*ஏனைய வினையெச்ச விகுதிகளெல்லாம் வினையெச்சப் பகுபதங்களி னுறுப்பாய் நிற்க இங்குக்குறித்த "ஏல்" முதலியனவோ அவ்வாறன்றித் தனிச்சொல்லாய் வினையெச்ச விகுதிகளென்னும் பெயர்க்கு யாதானும் சிறப்புரிமை பெற்று நின்றனவென்பது இலக்கண நூலாசிரியர் கருத்தாயின் அச்சிறப்புரிமையை யவர் விளக்கல் வேண்டும். அதையும் அவர் செய்திலர். அவர் காட்டிய எடுத்துக்காட்டு மிக்கொள்கையை நிறுவுதற்குப் பயன்படா. விகுதியைப் பகுபதவுறுப்பெனக் கொண்டவர் பிறகு தனிச்சொல்லென்று நாட்டத் துணிதல் குற்றமாகும்.

பழைய நூல்களி லெழுதிவைத்தனவற்றை யம்முறையே யெழுதி யச்சிலேற்றுதல் அரிய செயலன்று. கற்போர்க்கு மலை வைத்தரும் கருத்துக்களை யெல்லாம் தெளிவாக விளக்கி மொழி யின்கட் புகுந்த புதிய வழக்குக்களை யெடுத்துச் சொன்முடிபு கூறுதல் வேண்டும். இவை சிலவற்றை மேல்வரும் வினாக்களிற் காண்க.

வினாக்கள் வருமாறு :—

க. யான் அவரைக் கண்டது இரண்டாண்டுகட்குமுன் : யான் கல்வி கற்றது இப்பாடசாலையில் : இப்புத்தகம் வாங்கியது ஐந்தணாவுக்கு : இவை சொற்றொடர்களாய் முடிபெய்தி நிற்கின்றனவோ ? அவ்வாறாயி னெழுவாய் பயனிலை யென்ன ?

அவரிதைச் செய்தார் போலும் : அவரிதைச் செய்தார் போற்றோன்றுகின்றது: எழுவாய் பயனிலை யென்ன? "போல்" "போலும்" என்பனவற்றிற் கிலக்கண மென்ன ?

விதித்தன செய்து விலக்கியன வொழித்தலாற் பயனின் றாய் முடியும். எழுவாய் பயனிலை யென்ன ?

உ. காத்தல் வேண்டும் : காக்க வேண்டும் : காக்கச் சொல்லு : காக்கக் கருதினேன் : காக்கப்படாது : காக்கப்படும் : கூறல் வேண்டா : இருக்கப்பட்ட பொருள் : "காக்க" "படும்" "படாது" "பட்ட" "வேண்டும்" "வேண்டா" என இங்கு வந்தனவற்றிற் கிலக்கண மென்ன ? "வேறில்லையுண்டியார் வேண்டுந் தரும்படும்" என்றும், "செயப்பாட்டு வினையினைச் செப்புங்காலை" என்றும் நூற்பாச் செய்தபி னவற்றிற் குரைக் குறிப்பெழுதியும் மாணவ ரிக்கருத்திலிடர்ப் படுகின்றாரே.

"அன்று" "அல்ல" என்பவற்றிற்கிலக்கண மென்ன ? அன்று ஒன்றன்பாற் குறிப்பு வினைமுற்றென்றும், "அல்ல" பலவின்பாற் குறிப்பு வினைமுற்றென்றுங் கூறிய வாசிரியர் "அன்று" என்பதிருதிணைக்கண்ணும் பன்மைப் பெயரை எழுவாயாய்க் கொண்டதையும், "அல்ல" என்பதிருதிணைக்கண்ணும் ஒருமைப் பெயரை எழுவாயாய்க் கொண்டதையுங் கண்டிலரோ? கண்டாலவ்வழக்குக்களை யாராய்த லவர்கடனன்றோ ?

"வேறில்லை யுண்டைம்பான் மூவிடத்தன"

என்றும்,

"யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்"

என்றும் நன்னூலார் நூற்பாச் செய்தார்.

"வேறில்லை யுண்டியார் வேண்டுந் தகும்படும்...
திணைபா லிடமெலாஞ் செல்லு மென்ப"

என்பது இலக்கணக் கொத்து நூற்பா.

"ஆறன்மேற் செல்லும் பெயரெச்ச மன்றல்ல
வேறில்லை யுண்டு வியங்கோளுந்—தேறு
மிடமூன்றோ டெய்தி யிருதிணையைம் பாலு
முடனென்றிச சேறலு முண்டு."

நின்றாய் : நன்றாக : நல்லாய் : நல்லாக: வழக்கமாக : வழக்கமாய் : இப்படிச் சொன்னாராகவும் : தான் வருவதாகச் சொன்னார் : இவற்றின்கண் வந்த "ஆக" "ஆய்" என்னுஞ் சொற்களுக்கிலக்கண மென்ன ?

"செய்யுங்கள்" "செய்யுங்கோள்" இவற்றின்கண் வந்த விகுதிகள் யாவை ? அவ்விகுதிகளென்ன பொருளில் வந்தன ?

"உயர்ந்த" "சிறந்த" என்பன இறந்தகாலப் பொருளையே யெப்போது முணர்த்தி நிற்பனவோ ?

காரியப் படச்சேயும் : தொழிற் படச்சேயும் : இவற்றிற்கிலக்கண மென்ன ?

௩. (1) சாரியை யெழுத்துப் பேறுகளுக்கும்,

(2) அசைநிலை யிசை நிறைகளுக்குந் தம்முள் வேறுபாடென்ன ? உரிச்சொல்லிலக்கண மென்ன ? சூத்திர விருத்தி கற்றார்க்கு மிக்கருத்தின்கண் மலைவு தீரவில்லையே.

"கருங்குழல்" "கொல்களிறு" என்பனவற்றை யுரிச்சொற்றொடரென்றாற் படுமிழுக்கென்ன ?

௪. இக்காலத்தில் செய்யுள் நடையிலும் உரை நடையிலும் நூல் செய்வாரெல்லாம் சந்தி சேர்த்தும் பிரித்தும் எழுதுவதை யுற்றுநோக்கும்போது இவர் தம் மனம் போனவாறன்றி யாதானும் நேரிய விதிபற்றி யிவ்வாறெழுதுபவராகத் தோன்றவில்லை. இடர்ப்பாடு பெரிதுமுள்ள இக்கருத்தையு மாராய்ந்து செவ்விய முறை யொன்றை நிறுவுத லிலக்கணநூல் செய்வார் கடனன்றோ ?

இன்னோரன்ன பல கருத்துகளையும் இலக்கண நூல்களில் ஆராய்ந்து விளக்கல் இன்றியமையாதது. இங்கே கற்போர்க்கு,

மலைவு தருவனவெனக் குறிப்பிட்டனவெல்லாம் நினைவுக்கு வந்த முறைப்படியே யெழுதப்பட்டன.

இனி வழக்குகளு ளமைக்கற்பாலனவற்றை யமைத்துக் களை தற் பாலனவற்றைக் களைதலும் இலக்கணநூல் செய்வார்மேற் பொறுத்த கடமையே. பிழை வழக்குக்களைத் திருத்துதல் இலக்கணநூல் செய்வார் கடனன்றேல் யார் கடனாகும்?

"ஏனவை புணரி னியல்பென மொழிப" "நம்முன் கவ் வாம் வம்முன் யவ்வே" "எகரவினா முச்சுட்டின் முன்ன ருயிரும் யகரமும் எய்தின் வவ்வும்" "சுட்டுவகர மூவினமுற முறையே ....மியல்புமாகும்" என்னும் நூற்பாக் காட்டுகளுக் குறை கண்டு "அவ்யானை" "அவ்யாழ்" என்று காட்டியவர் "அவ்வி யாழ்" "அவ்வியானை" என்பன போன்ற வழக்குக்களை யாரா யாமல் விடுதல் தகுமா? "தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிக ரந் துன்னுமென்று துணிநரு முளரே" என்னும் பொதுவிதி பற்றி யிவ்வழக்குச் சிறப்புறுமோ? இலக்கணக் கடலின் கரை கண்ட புலவர் செய்த நூலின் கண்ணுங் குற்றங்கண்டா லதனைக் கடிதல் இலக்கணநூல் செய்வார் கடனாகும்.

"ஆறனொருமைக் கதுவுமாதுவும்" என்னும் நூற்பாவுக் குறை கண்டு "எனதுகை" "எனகைகள்" என்று காட்டியவர் "எனது கைகள்" என்பது போன்ற வழக்குக்களை யாராய்தல் வேண்டுமென்பது சொல்லாமலே யமையும்.

சேனாவரையம் சூத்திரவிருத்தி முதலிய இலக்கணநூல்கள் நன்கு கற்று வல்ல பண்டிதரும் "இப்பசுக்கள் என்பது" என் பதுபோன்ற சொற்றொடர்களை வழங்குமாறு இலக்கணநூல் செய்வாரும் தம் கடமை யறியார்போல் வாளாவிருந்தால் மாணாக்கர்க்கு மலைவு தீர்வ தெவ்வாறு?

மாணாக்கர்க்குத் தெளிவு பிறப்பித்தலைப் பயனாகக்கொண்டு குற்றங்க ளெங்கெங்குக் காணப்படினு மவற்றைக் கடிதல்வேண் டும். "முக்குணங்களு மாறிமாறி வருதலின் அதுபற்றி யெனைத் துணை நுண்ணறிவாளரு மொரோவழி மயங்குதலியல்பென்க"

(சிவஞானயோகிகள்)

உரையாசிரியர் சில ரெழுதியவற்றுட் கண்ட சில சொற் றொடர்கள் வருமாறு: "ஆகாய முதலிய அருவப்பொருள் உரு வத்தியல்புடைய தாகாது" "சந்திரன் முதலிய அருவுருவப் பொருள் அருவியல்பேயுடையது மாகாது"? ["முதலிய என்

னுஞ் சொல் விட்டமையால், அருவப்பொருள்'' ''அருவுருவப் பொருள்'' என்பன பன்மை குறித்து நின்றனவோ?]

''விழவும் பூசையும் நடவாது''

''புலன்களைந் தாகலான் அவற்றின்கட் செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று'' [இவற்றிற் பாட வேறுபாடு முண்டு]

இன்னோரன்ன சொற்றொடர்களை யாராய்ந்து வழுவமைத் தல்களைச் செய்தல் இன்றி யமையாதது. எண்ணும்மை கொண்டிணைத்த (சாத்தனும் பூதனும் நாகனும் என்பதுபோல) இரண்டு மூன்று பெயர் ஒருமை வினைகொண்டு முடியும்போது ஒவ்வொரு பெயரும் வினையோடு தனித் தனிச் சென்றியையு மென்று வழுவமைத்தலும், பால்வழு இடவழுவாய் வந்தனவற் றையெல்லாம் வழுவமைப் பொன்றன்றி வேறு ஏது வொன்று மின்றி ''ஒருமையிற் பன்மையும்'' என்னும் நூற்பாச் சொல்லி வழுவமைத்தலும் இலக்கண வரம்பழித்தற் பயனையே தருமுத் திகளாகும்.

பிறமொழிகளுக்குரிய மரபும் நடையும் தமிழில் மிகப் பயின்றுவரு மிக்காலத்தில் தமிழின் சிறப்பியல்பு குன்றுதபடி தமிழ் மரபையும் தமிழ் நடையையும் மாணுக்கர்க்கும் பிறர்க்கு மறிவுறுத்திப் பிறமரபும் பிறநடையும் தமிழின்கட் டலையெடுத் துத் தமிழினியற்கை வனப்பைக் கெடுத்து விடாதபடி தடுத்த லும் இலக்கண நூலாசிரியர் கடமையே. மொழியின் வளர்ச் சிக்கேற்கப் புதுவிதிகளையும் பிரயோகங்களையு மெடுத்தாளுவதே யன்றிப் பழையவாசிரியர் நன்காராய்ந்து முடிபுகாணுத கருத்து களிலும் பொருண்முடிபு செய்தல் விரும்பற்பாலதே. இம்முயற் சியை மேற்கொண்டு நம்மொழியைச் சீர்ப்படுத்துவது இலக் கணநூல் செய்வார் கருத்தூன்றற் பாலதொன்றும்.

தமிழ் மக்கட்குக் கருத்து வெளியீட்டுக்கும் அறிவுநிகழ்ச் சிக்கு மின்றியமையாப் பெருங் கருவியாய் விளங்கும் நம் 'உயர் தனி'ச் செந்தமிழ் மொழி இருவகை வழக்கினுஞ் சிதைந்து தன் சிறப்புக் குன்றி இழிந்தார் வழக்காமென விகழ்ந்தொதுக் கப் படுமாயி னதனல் நமக்குப் பலவாற்றானும் கேடேயன்றி வசையுமாம். ஆதலின் யாம் இச்சிற்றுரையை யெழுதத் துணிந்ததுபற்றி நல்லார் நம்மை யிகழார். இச்சிற்றுரையும் ஐந்திலக்கணப் பரப்பில் எழுத்துஞ் சொல்லும்பற்றிய கருத்துக் களில் மாணுக்கர்க்கு மயக்கத்தைத் தருவன சிலவற்றை வெளி

யிடுதலையே முதன்மையான நோக்கமாகக் கொண்டது. தமிழ் வல்ல பெரியார் குற்றநீக்கி நல்லன கொள்க.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

திருக்குறள்.

கள்ளி யகிலுங் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையைத்—தெள்ளி
ஆர்க்கும் அருவ மலைநாட நாய்கொண்டால்
பார்ப்பாரும் தின்பர் உடும்பு.

பழமொழி நானூறு.

மறைஞான சம்பந்தர்

[திரு. S. அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் M. A., L. T.]

(எஉச-ம் பக்கத் தொடர்ச்சி.)

பல் சுவைகளும் நிரம்பிய இப்புராணம் விக்கிரமவாண்டில் [கி. பி. 1880] அச்சாகி வெளியாயிற்று. அதற்குமுன்னரே இராட்சசவாண்டில் [கி. பி. 1855] மழவை மகாலிங்கைய ருரையோடு வெளியாயிற்று சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய அருணசலபுராணம். இன்றும் அவ்வருணசலபுராணமே பெரு வழக்காயிருக்கின்றது. சின்னாண்முன் வெளிவந்த அந்தப் புராணப் பதிப்பொன்றின் முகவுரையில், "திருவண்ணமலையின் வரலாற்றையும் அதன்கண் தவங்கிடந்தோர் வரலாறுகளையும் விரித்துக் கூறியுள்ள தமிழ் நூல்களில் இரண்டே எவரும் போற்றத்தக்கவை; அவை அருணகிரிபுராணமும் அருணசலபுராணமு மாம். இவ்விரண்டனுள் தமிழுலகெங்கணும் பரவியிருப்பதும் சிறுவர் சிறுமியர் வாயில் உலவுவதும் அருணசலபுராணமே யாம். மூவர் முதலிகள் அருளிச்செய்த அடங்கன்முறையிற் கயிறிட்டுக் கருத்தறிவது போல அருணசல புராணத்தினுங் கயிறு சாத்தித் திருவுளக் குறிப்பை யறியும் வழக்கம் தமிழ் நாடெங்கணும் நிலைத்திருக்கிறது. இஃதொன்றே அருணசல புராணத்தின் தெய்வத் தன்மையை இனிதுவிளக்கும்" என் னும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரவியிருப்பது அருணசலபுராண மென்பதை எல்லாரும் ஒப்புவாராயினும், அதிற் கயிறு சாத்திப் பார்க்கும் வழக்கம் தமிழ் நாடெங்கணுமுண்டு என்பதைப் பலர் மறுக்கக்கூடும். ஆயினும் இப்புராணத்துக்கு முன்னே வைதிகர் சைவர் வேண்

டச் செய்யப்பட்ட அருணகிரிபுராணம் வழக்கு வீழ்ந்ததற்கும் பின்னே அவ்வாறு நூல் செய்தற்கான காரணமொன்றும் புலப்படாத இது பெருவழக்கா யிருத்தற்கும் காரணந் தெரியவில்லை. சைவ எல்லப்ப நாவலர் அருணகிரிபுராணம் உண்டென்பதையுங் குறித்திலர். நாவலரது புகழும் அவரது 'பத்திச்சுவை' மலிந்த பாடல்களுமே ஏதுவாயிருக்கக் கூடும்.

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார முந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே.

என்னும் அரிய பாட்டினைச் செய்தவரும்,

செப்புமியற் றமிழ்களெலா மரியயனே முதலாய தேவர்க் கோதி
யொப்புவிக்க வறியாம லரனிடத்தே வளைத்துவளைத் துரையா நின்றேன்

என்றவரும் அவரேயன்றோ?

இனி, நூல் வரலாறு கூறுங்கால் அருணகிரிபுராணம்

சைவபுரா ணந்தனிலா யிரகோடி யுருத்திரசங் கிதைதான் சான்றோ
ரைவகைவேள் வியரமரு மருணகிரி வரத்தைவிரித் தறைத லாய்ந்தே

எனவும், அருணாசலபுராணம்

பொருத்தமன விருடியருக் கருட்சூதன் மொழிந்தசிவ புராணங் கோடி
யுருத்திரசங் கிதையுரைத்த வருணகிரி வளத்தினையா னுரைக்கலுற்றேன்

எனவும் உரைத்தன. பின்னதற்கு உரைசெய்த மழவை மகாலிங்கையர் "சிவபுராணங் கோடியாகும். அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் ருத்திரசங்கிதையிற் சொல்லிய அருணாசலஸ்தலமகிமை" யென்று பொருள் கூறினர். கந்தபுராணத்தில் உருத்திரசங்கிதை யென்றொரு சங்கிதையில்லை. சிவ மகா புராணமென்னுஞ் சைவபுராணத்திலே வாயு சங்கிதையில், "வேதத்திற்குச் சமானமான இப்புராணம் வித்தியேச்சுர சங்கிதை உருத்திரசங்கிதை, விநாயக சங்கிதை, உமா சங்கிதை, மாத்ருசங்கிதை, ஏகாதசருத்திர சங்கிதை, கைலாச சங்கிதை, சதருத்திர சங்கிதை, கோடிருத்திர சங்கிதை, சகச்சிரகோடிருத்திரசங்கிதை, வாயுசங்கிதை, தர்மசங்கிதை" எனப் பன்னிரண்டு பாகங்களை யுடையதாயிருக்கும்" என்று சொல்லப்பட்டது. இவற்றுள் பெயர் அளவாலேனும் நமக்கு அகப்பட்டிருப்பன வித்தியேச்சுர சங்கிதையும், கைலாச சங்கிதையும், வாயு சங்கிதையும், உண்மைப்பெயர் மாறியுள்ள ஞானசங்கி

தையுமே யென்பது திரு. ஈக்காடு இரத்தினவேலு முதலியார் மொழிபெயர்த்து வெளியிட்ட தமிழ்ச் சிவ மகாபுராணத்தால் விளங்கும். ஆதலால் மறைஞான தேசிகர்க்கு ஆதாரமாகிய உருத்திர சங்கிதை நாவலர்க்கு ஆதாரமாகிய கோடிருத்திர சங்கிதையா அன்றி வேறு உருத்திர சங்கிதையா. என்றறியு மாறில்லை. அருணகிரிபுராணத்திலுள்ள சருக்கங்களும் அவற்றினுட் பொருளும் முன்னரே குறிக்கப்பட்டன. அருணாசல புராணத்தில் பாயிரத்துக்குப் பின், அருணாசல மகிமை சொல்லும் திருநகரச் சருக்கமும், மலை தோன்றிய வரலாறு கூறும் திருமலைச் சருக்கமும், பார்வதி தேவியார் திருவவதாரச் சருக்கமும், திருக்கண்புதைத்த சருக்கமும், இடப்பாகம்பெற்ற சருக்கமும், புளகாதிபச் சருக்கமும், மற்றப் புராணத்துக் காணும் வரலாறுகளையே சிறிது மாற்றி யுரைக்கின்றன. வச்சிராங்கத பாண்டியன் சருக்கம், ஆதித்த சருக்கம். பிரதத்த சருக்கம், பாவந்தீர்த்த சருக்கம், என்றிவைகள் வேறுபிருக்கின்றன. தற்காலத்துப் பதிப்பக்களிற் காணும் வல்லாளராஜன் சருக்கம் 61-செய்யுட்களும் முதற்பதிப்பி லில்லாமை குறிக்கத்தக்கது. இறுதியில் "ஆகத் திருவிருத்தம் 586 அருணாசலபுராணம் முற்றிற்று" என்றுள்ளது. இப்பொழுதுள்ள பதிப்புக்களிற் காணும் திருவிருத்தங்கள் 649. முதற்பதிப்பில் "அங்கிகுல மோங்கவரும்" என்னும் பாயிரத்திறுதிச் செய்யுள் காணப்படாமையம் காப்பு எண்ணிக்கையில் வாராமையும் நோக்கின் கணக்கில் வேறுபாடில்லை. வல்லாளராஜன் சருக்கம் சைவ எல்லப்ப நாவலர் வாக்குத்தானா என்பது நன்கு ஆராயத்தக்கது. இனி, அருணாசல மகாத்மியம் என்னும் வடநூல் அகப்பட்டு அது தமிழின் மொழிபெயர்ப்பா யிராதவழி இவ்விரண்டு புராணங்களில் எதற்குச் சான்று மிகுதியென்பதைத் தெரிவிக்கக் கூடும்.

மற்று, சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனார் அருளிச் செய்தன வென மகாசிவராத்திரிகற்ப முதலிய சில சமய நூல்களைச் சிதம்பரம் ஈசானிய மடம் உயர்திரு இராமலிங்க அடிகளால் பரிசோதிப்பித்துப் பதிப்பித்த திரு. ஈ. இரத்தினவேலு முதலியார் தம் முகவுரையில், "இந்நூலாசிரியர் வேளாளர் குலத்திலே பரம்பரைச் சைவாசாரியர் மரபிலுதித்து மறைஞான சம்பந்தரெனத் திருநாமம் பெற்று ....சிதம்பரத்திலே வீற்றிருந்தவர். இத்தகைய இவர்........சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கு ஒரு அரிய உரையும், உபாகமங்களு ளொன்றாகிய சிவ தருமோத்தரமும், தாம் பயின்ற சிவாகமங்களின் வழியே சைவ சமயநெறி, பரமததிமிரபானு, சங்கற்ப நிராகரணம், இறைவ

னூற்பயன், பஞ்சாக்கரமாலை, சிற்றம்பல நாடிமாலை, மகா சிவராத்திரி கற்பம், மாதசிவராத்திரி கற்பம், சோமவார சிவ ராத்திரி கற்பம், சோமவாரகற்பம், வருத்தமறவுய்யும் வழி, உருத்திராக்க விசிட்டம், திருக்கோயிற் குற்றம், முதலியவை களும், அருணகிரிபுராணமும் தமிழில் அருளிச் செய்திருக் கின்றனர் என்றுரைத்தார். திரு. முதலியார் பதிப்பித்தவை மகாசிவராத்திரி கற்பம் முதலிய ஏழுமாம். அவர் சிதம் பரத்திலிருந்த உயர்திரு இராமலிங்க அடிகள் உதவிகொண்டு அவற்றைப் பதிப்பித்தனராகலின், அவர் நூலாசிரியரைப் பற்றிக் கூறுவன அவ்வடிகள்பாற் கேட்டவையாகல் வேண் டும். மறைஞான சம்பந்த நாயனாரே சிவஞானசித்தியார் சுபக்கவுரையும் அருணகிரி புராணமுஞ் செய்தனரென்னுங் கொள்கை சிதம்பரத்தில் நிலவுமாயின் மறைஞான தேசிகர்க்கே மறைஞான சம்பந்தரென்னும் வேறு பெயர் வழங்கிற்று? திரு. அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் ஒரிடத்துச் சித்தியார் உரை காரர் பெயர் மறைஞான சம்பந்த தேசிகர் என்றமை முன் னரே குறிக்கப்பட்டது. சித்தியார் பாயிர வுரையில் இவ் வுரை காரரே ஆக்கியோன் பெயர் அருணந்திதேவ நாயனார் என்றும், கேட்போர் அவர் மாணாக்கருட் டலைமையாகிய மறைஞான சம்பந்த நாயனார் என்றும் சொல்லுதலும் கவனிக்கத்தக்கது. அவரே சைவ சமயநெறி முதலிய நூல்களையுஞ் செய்தவராயின் அவர் பெயரை மறைஞான சம்பந்த நாயனார் என்றது பிற் காலத்து வழக்காதல் வேண்டும். சந்தானகுரவருள் ஒருவரா கிய மறைஞான சம்பந்தரே சைவசமயநெறி முதலிய நூல் களையுஞ் செய்தவர் என்று சிலர் கூறியது மயக்கவுரையென்பது சொல்லவேண்டா. இந்நூல்களை யெல்லாஞ் செய்யுங்காலத்து அவர்க்குப் பெயர் மறைஞான தேசிகராயிருந்து பின் மறை ஞானசம்பந்தரெனப் பிறழ்ந்தது என்று சொல்வதற்குமில்லை. சைவசமயநெறி யிறுதியில் "சைவசமயநெறி சாற்றினன் சம்பந் தன்" என்று கூறப்பட்டிருக்கின்றது. இனி, அருணகிரிபுராணச் சருக்கங்களின் இறுதியில் வரும் பாட்டுக்களுக்கும் சிவதரு மோத்தர வியல்களின் இறுதியில் வரும் பாட்டுக்களுக்கும் காணப்படும் ஒற்றுமையை ஆய்ந்து நோக்கின் இரண்டு நூல்க ளுக்கும் ஆசிரியர் ஒருவரேயாதல் வேண்டுமென்னுந் துணிவு மனத்துள் தோன்றுமலிராது. இன்னும், சைவசமயநெறி முத லிய சில நூல்களினும் அருணகிரிபுராணத்தும் சந்தானகுரவருள் மெய்கண்ட தேவர்க்குமட்டுமே வணக்கங் கூறப்பட்டுள்ளமை யும் அத்துணிவை யுறுதிப்படுத்தும். ஆயினும், சித்தியார் உரை மறைஞான தேசிகருரை யென்றே வழங்கி வந்திருத்தலா லும், சிதம்பரம் முருகபட்டாரகரே அருணகிரி புராணத்தை

மறைஞானதேசிகர் செய்ததென வுரைத்தமையாலும், சைவ சமயநெறி முதலிய நூல்களைச் செய்த மறைஞான சம்பந்தரே அவ்வுரையினையும் புராணத்தினையுஞ் செய்தவரென்று துணிந் துரைத்ததற்குக் கிடைத்துள்ள சான்றுகள் போதா.

இனி, மறைஞான சம்பந்தரைப்பற்றிச் சொல்லவேண்டிய வற்றையும் இவ்விடத்தே சொல்லிவிடுதல் நலமாகும். இவர் சிதம்பரம் குகை மறைஞானசம்பந்தரெனப் படுவரென்றும், குகை இவர் குகைமடத்தைச் சார்ந்தவரென்பதை யுணர்த்து மென்றும் சொல்வர். சைவசமயநெறியும் சிவதருமோத்தர மும் சைவாசாரத்தைத் தெரிவிக்கும் பிரசித்தமான நூல்கள். பிர மததிமிரபாநு சித்தியார் உரைப் பதிப்பில் மறைஞானதேசிகர் செய்ததாகக் குறித்திருப்பது முன்னரே காட்டப்பட்டது. அது சைவ மதத்திற்குப் புறம்பான மதங்களைக் கண்டிக்கும் நோக்கத் தோடு எழுதப்பட்டதாகல் வேண்டும். பரமததிமிரத்தை யொழிக்கும் பாநு என்பது பொருள். நூல் அச்சிற்கு வந்தில தாகலின் மேலொன்றுஞ் சொல்வதற்கில்லை. சிலவிடங்களிற் காட்டப்பட்ட மேற்கோள்களைக்கொண்டு அது குறள் வெண்பா வானியன்ற தென்னலாம். சங்கற்பநிராகரணம் உமாபதியார் சங்கற்பநிராகரணம் போன்றதொன் றாகல்கூடும். ஆறுமுக நாவலர் இந்நூலிலிருந்து சில திருக்குறள்களை எடுத்தாண்டிருக் கிறார். அதிலிருந்து நூலியல்பைத் தெரிந்துகொள்வதற்கு மில்லை. இதுவும் அச்சாகவில்லை. இறைவனூற்பயன் என்ப தும் குறள் வெண்பாவா னியன்றநூல். ஆறுமுக நாவலரால் எடுத்தாளப்பட்டது. இதுவும் அச்சாகாததே. பஞ்சாக்கர மாலை ஐந்தெழுத்துக்களைப்பற்றி யுரைக்குமென்பதற்கு மேல் ஒன்றுஞ் சொல்ல வியலாது. பஞ்சாக்கரமாலை யென்றொரு வெண்பா நூல் அச்சிற்கு வந்திருப்பது கண்ணுடைய வள்ள லார் வழிவந்தார் செய்ததென்று புலப்படுகின்றது. அதுதா னிதுவென்று எங்ஙனம் உரைப்பது? சிற்றம்பல நாடிமாலை சிற் றம்பல நாடிகள்மேற் செய்யப்பட்ட நூலாகல் வேண்டும். அப் பெயருடைய நூலொன்றும் அச்சிற்கு வந்திலது. பஞ்சாக்கர மாலையும் சிற்றம்பல நாடிமாலையும் மறைஞான சம்பந்தராற் செய்யப்படாது தவறாக அவராற் செய்யப்பட்டனவாகக் கரு தப்பட்டு மிருக்கலாம். வருத்தமறவுய்யும் வழி திரு முதலியார்
[1901] பதிப்பித்த பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்க பிரசுரமாக
[1905] அட்டாங்கயோகக்குறளோடு வெளிவந்தது. அவற் றைப் பரிசோதித்த சேற்றூர்ச் சுப்பிரமணிய கவிராயரவர்கள் நூல்களின் பிரதிகள் திருவாவடுதுறை யாதீனத்திற் கிடைத்தன வென்றும், ஆசிரியர் பெயர் இடம் முதலாயின விளங்கவில்லை

யென்றும் கூறி, ஒரே குறள் வெண்பா இரண்டு நூல்களினுங் காணப்படுதலின் ஆசிரியர் இரண்டற்கும் ஒருவரேயாயிருக்கலா மென்றும் ஒருவர்க்கு மற்றவர் மாணுக்கரா யிருக்கலாமென்றும் சிலர் கூறுவதாகவும் உரைத்தனர். ஆறுமுகநாவலர் பெயருரை யாது எடுத்தாளும்

> ஏந்திழையார் தன்சயனத் தெய்தித்தன் மெய்தொடினுங்
> காய்ந்துவர்த்த லேதுறவு காண்.

என்னும் குறள் வெண்பா அட்டாங்கயோகக் குறளிற் காணப் படுதலாலும், சிறிதுகாலத்திற்குத் திரு. முதலியார்க்குப் படி யெடுத்துக்கொள்ளக் கிடைத்த சுவடி ஆறுமுகநாவலர் வழியின ரிடத்துக் கிடைத்ததென்று தெரிதலாலும், அட்டாங்கயோகக் குறளும் மறைஞான சம்பந்தர் செய்த நூலாகவே யிருத்தல் கூடும்.

இதுவரை செய்த ஆராய்ச்சியால் நூலாசிரியர் பெயரி லேயே ஐயமிருப்பது உறுதியாக ஏற்படுகிறது. ஆங்காங்கே மறைந்து கிடக்கும் நூல்களை வெளிக்கொணர்ந்து அச்சிடுவித்த லும், தமிழ்நாட்டில் பல பல விடங்களில் திகழ்ந்த ஆசிரியர்கள் வரலாறுகளைத் தாம் அறிந்தவரை அவ்வவ் விடங்களிலுள்ளார் வெளிப்படுத்தலும் தமிழ் மக்களுக்கெல்லாம் கடமையாகுமென் பது இதனால் விளங்கவில்லையா?

செந்தமிழ்ச் செல்வி சிலம்பு ௩ பரல் ௧உ ல் வெளிவந்த
"மறைஞான தேசிகர்" என்னும் கட்டுரையிற்

பிழைதிருத்தம்—

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
எ௧௬	உ௫	சிவக்கொழுந் தாசிரியர்	சிவக்கொழுந் தாசாரியர்
எஉ௰	௧உ	சுபக்க	சுபக்ஷ
எஉ௧	உஎ	யுடையது	யுரைப்பது
	உ௮	கலியபதம்	கலியப்தம்
எஉஉ	எ	தாள	தான
	௧௬	ளுடலாரு௩்	ளுசலாடு௩்
	௧௮	ருரைத்தது	ருரைத்ததும்
	௩௰	யவர்பலகா	பவர்பலகா
எஉ௩	உ௬	லுரிமை	வுரிமை
	௩௪	திளையார்க்	திளையார்க்
எஉ௪	௩	எனத்திரு	என ஒரு
	௧௫	கும்	குப்

அத்துவித உண்மை ஆராய்ச்சி

[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளையவர்கள் B. A.]

அத்துவிதம் என்பது இறைவன் உயிர்கள் ஆகிய இரு வேறு அறிவுப் பொருள்களுக்கும் எப்பொழுதும் இயல்பாய் உளதாய ஒற்றுமைத் தொடர்பு. இந்தத் தொடர்பை உயிர்கள் உலகநெறியில் உள்ளபடி அறியாமலிருக்கிறார்கள். வீட்டு நெறியிலேதான் அதனை உயிர்கள் உள்ளபடி முற்றிலும் அறிதல் கூடும். உலகநெறியில் உயிர்களாகிய நாம் ஆராய்ச்சிமுறையில் எத்துணை அறிகிறோமோ அத்துணை நாம் அந்தத் தொடர்பை ஒருவாறு அறிதல்கூடும். அந்தத் தொடர்பைப்பற்றிய அறிவின் வழிதான் நமது பல திற ஒழுக்கமும் அடைதல்கூடும். ஆதலின் அவ்வாராய்ச்சி நமக்கு உலகவாழ்வில் மிக்க பயனுடைத்தாகின்றது.

இத்தகைய அத்துவிதத் தொடர்பில் ஒன்றாய் நிற்கும்நிலை, வேறாய் நிற்கும் நிலை, உடனாய் நிற்கும்நிலை ஆகிய மூன்று நிலைகள் உள என்றும் அந்த மூன்று நிலைகளும் முறையே வேட்கை (இச்சை) அறிவு செயல் என்னும் மூன்று வலிகளைப் (சத்திகள்) பற்றியுள்ளன என்றும் முன் கூறப்பட்டன. (செந்தமிழ்ச் செல்வி. இதழ் ரு. பரல் கக.) இந்தக் கட்டுரையில் அந்தமூன்று நிலைகளும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு பட்டுள்ளன என்றும், ஒவ்வொன்றும் தனித் தனியே குறைபாடுடையது என்றும் உலகவழக்கில் வைத்து என் அறிவுக்கெட்டியவாறு விளக்கிக் கூறப்படும்.

௩. யாதாமொரு உண்மை நூல்களிற் கூறப்பட்டால் அந்த உண்மையை நாம் உலக வழக்கில் வைத்துக் கண்டால் அது நமக்கு நன்கு புலப்படும். வீட்டினை உயிர்கள் அடைதற்குரித்தாகிய அத்துவித உண்மையானது நாம் வாழும் உலகவாழ்வில் ஒரு புடையாகவாவது (ஏகதேசமாயாவது) விளங்கி அதனை அறியாவிடின் உலகவாழ்வினால் நாம் அடையும் பயன் யாது?

௪. இந்த மூன்று நிலைகளையும் சுருக்கமாக நாம் ஒன்று நிலை வேறுநிலை உடனிலை என்று கூறலாம். இந்த மூன்று நிலைகளில் ஒவ்வொன்றும் தனித்தனியே குறைபாடு உடையது. இவைகளில் ஒன்று நிலையை ஒருபொருள் வழக்கர் (கேவலாத்துவிதிகள்) கொள்கின்றனர்; வேறு நிலையை இருபொருள் வழக்கர் (துவைதிகள்) கொள்ளுகின்றனர்; உடனிலையை அடைபொருள்

வழக்கர் (விசிட்டாத்து விதிகள்) கொள்ளுகின்றனர். ஆதலின் அந்தக் கொள்கை ஒவ்வொன்றும் குறைவுபாடுடையது. இரண்டற்றபொருள் வழக்கில் (சுத்தாத்துவிதத்தில்) இந்த மூன்று கொள்கைகளும் அடங்கியுள்ளன. இரண்டற்றபொருள் வழக்கு (சுத்தாத்துவிதம்) இம்மூன்று கொள்கைகளையும் தன்னகத்தே அடக்கிக்கொள்ளுதலன்றி அவைகளை மேற்கொண்டிருக்கும் சிறப்பையுமுடைத்து. அது தனியே ஒரு கட்டுரையிற் கூறப்படும்.

ரு. ஒவ்வொரு நிலையும் தனித்தனியே குறைபாடு உடையது என்னும் உண்மையை யாரும் அறியும்படியான ஒரு வெளிப்படையான எடுத்துக் காட்டில் வைத்து விளக்குவாம். அது அடியில் வருமாறு:—நாட்டுப்புறத்திலுள்ள ஒருவன் தனியே சென்னைக்கு ஒருகாலத்தில் புதிதாக வந்து ஒரு தெருவிலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தான். அவன் ஒரு பகலில் தனியே வெளியே ஊர் பார்க்கச் சென்றான். பல இடங்களையும் பார்த்துவந்ததில் நேரமாய் இரவு வந்துவிட்டது. தான் இறங்கியிருக்கும் வீட்டுக்கு அவன் நடந்துபோக வழி தெரியவில்லை. அங்கே வந்த ஒருவனைப் பார்த்து அவனைத் தனக்கு வழி காட்டும்படி வேண்டினான். அப்படி வந்த மகனுக்கு வழி தெரியுமானாலும் அன்பில்லாததனால் அவன் தனக்கு வேலையிருக்கிறது சுறுக்காய்ப் போகவேண்டும் என்று சொல்லிப் போய்விட்டான். மற்றொருவன் வந்தவனை அவன் கண்டு வழிகாட்டும்படி சொன்னான். இவன் அவனுடைய வழி அறியாமை நிலைக்கு மிக உள்ளம் வருந்தினாலும் அயலூரானா யிருந்ததால் எனக்கு வழி தெரியாதே நான் என்னசெய்வேன்'' என்று சொல்லிப் போய்விட்டான். அப்பால் மூன்றாவது மகன் ஒருவன் அங்கே வந்தவனை அவன் வழிகேட்டான். இவன் அவனுக்கு இன்ன இன்ன வழியிலே போய்த் தங்கி வீடு போக வேண்டுமென்று அறிவித்துப் போய்விட்டான். அவனுக்கு மூன்றாவது மகன் அறிவித்த வழியிலே போகத் தெரியவில்லை. வழி அறிவித்தால் மட்டும் போதாது. தன் கூடவே வந்து வீடுவரை வழிகாட்டல் வேண்டும் என்று சொன்னான். இந்த நான்காவது மகன் வழி அறியாதவனுக்கு உள்ளமிரங்கி அன்புடையவனாய் வழி அறிவித்ததுமன்றி அவன்கூடவே தங்குவீடு வரையும் வந்து வழிகாட்டி அவனைப் போகும்படிச் செய்தான்.

௬. இந்த எடுத்துக் காட்டிலிருந்து விளங்கும் பொருளைக் கருதுவாம். முதலாவது மகனிடத்தில் அறிவிருந்தது. திருந்திய இச்சையாகிய அன்பு இல்லை. அன்பு இல்லாததனால் அறிவினால்மட்டும் செயல் நிகழவில்லை. அதாவது வேறு நிலை இருந்

தது, ஒன்று நிலை இல்லை; அதனால் வேறு நிலையாகிய அறிவித்தலாவது உடனிலையாகிய அறிவித்தபடி ஒழுகுதலாவது நிகழவில்லை. இரண்டாவது மகனிடத்தில் அன்பு இருந்தது. அறிவு இல்லை; அதனால் அறிவித்தலும் உடன் செல்லுதலும் நிகழவில்லை. அதாவது இவனிடத்தில் ஒன்று நிலை இருந்தது. வேறு நிலை இல்லை. அதனால் அறிவித்தலும் உடன் செல்லுதலும் நிகழவில்லை. மூன்றாவது மகனிடத்தில் அன்பும் அறிவும் இருந்தது. அதனால் அறிவித்தல் நிகழ்ந்தது. ஆயினும் அறிவித்தவண்ணம் வழிச் செல்ல வழி தெரியாத அவனுக்கு ஆற்றலில்லை. நான்காவது மகன் அன்பும் அறிவும் உடையவனாயிருந்து வழி தெரியாதவனுக்கு வழி அறிவித்ததுமன்றி அவன் தங்கு வீடுவரை கூடவே சென்று உதவி செய்தான். இவன் உதவியினாலேயே வழி தெரியாதவன் தான் இறங்கியிருக்கும் வீடுபோய்ச் சேர்ந்தான். நான்காவது மகனைப்போல இறைவன் தன்னுடைய வேட்கை ஆற்றலால் (இச்சாசத்தி) உயிருடன் கலந்து ஒன்றாயிருக்கின்றான், தன்னுடைய அறிவு ஆற்றலால் (ஞானசத்தியால்) உயிருக்கு வேறாய் நின்று அறிவிக்கின்றான்; தன்னுடைய செயலாற்றலால் (கிரியாசத்தியால்) உயிரோடு உடனாய் நின்று நுகர்வுப்பொருள்களை நுகரவும் செய்கின்றான். நுகர்ந்தாலும் அவன் தன்னியற்கைப் பண்பினின்று மாறுதல் அடையான். இறைவன் உயிருக்கு அறிவிக்கின்ற செயல் காட்டுமுதவி (காட்டுமுபகாரம்) என்றும் உடன் சென்று நுகரும் செயல் காணுமுதவி (காணுமுபகாரம்) என்றும் கூறப்படும். காட்டுமுதவிக்கும் காணுமுதவிக்கும் அன்பிருந்து கலத்தல் இன்றி அமையாது வேண்டப்படுவதாகும். காட்டும் உதவியை இறைவன் உயிருக்குச் செய்தாலும் காணுமுதவியை அவன் செய்யாவிடின் உயிரினது செயல் நிகழாது. இறைவனிடத்தில் அன்பு, அறிவு, செயல் மூன்றும் நிறைவாயிருந்தாலும் உயிரினுடைய தகுதி சகிக்கத் தக்கவாறு அவன் அவைகளை உயிரினது மேற்போக்குக்காக எப்பொழுதும் ஒவ்வொரு உயிருக்கும் சலிப்பின்றிச் செய்து வருகின்றான். இறைவன் உயிர்களுக்கெல்லாம் பொதுவாய் உதவிசெய்கின்றதுமன்றி ஒவ்வொரு உயிர்க்கும் அதற்குத்தக்கவாறு சிறப்பாயும் மிக்க பொறுமையுடன் செய்துவருகின்றான். இறைவன் இவ்வாறு செய்துவருகின்ற பேருதவியை ஒருவாறு அறிவுடைய மக்களாகிய நாம் அறிந்து உணர்ந்து ஒழுகினாலன்றி நாம் உலகவாழ்வில் எவ்வாறு உய்தல் கூடும்?

எ. ஒன்று நிலையன்றி வேறுநிலை நிகழாது, வேறு நிலை அன்றி ஒன்று நிலை நிகழாது. ஒன்று நிலையும் வேறு நிலையும் நிகழ்ந்துதான் உடனிலை நிகழ்தல்வேண்டும். மூன்று நிலைகளும்

இவ்வாறு ஒன்றுக்கொன்று பிரியாத தொடர்புடையனவாயிருக்கின்றது. ஒற்றுமைநிலை (அபேதம்) யன்றி வேற்றுமை (பேதம்) நிலையில்லை; வேற்றுமை நிலை (பேதம்) அன்றி ஒற்றுமைநிலையில்லை; ஒற்றுமை நிலையும் (அபேதமும்) வேற்றுமை நிலையும் (பேதமும்) அன்றி வேற்றுமை யொற்றுமை நிலை (பேதாபேதம்) இல்லை. உலகவாழ்வில் நம்முடைய அறிவு தனி அறிவாயிருக்க (absolute knowledge) இருக்கிறது. நாம் காணவில்லை. நமது அறிவெல்லாம் ஒன்று மற்றொன்றைப்பற்றிய அறிவாகவே (relative knowledge) இருக்கிறது. நாம் வேற்றுமையை அறியாமல் ஒற்றுமையையும் ஒற்றுமையை அறியாமல் வேற்றுமையையும் இரண்டினையும் அறியாமல் ஒற்றுமை வேற்றுமையையும் எவ்வாறு அறிதல் கூடும்? ஒற்றுமை வேற்றுமை நிலைதான் ஒற்றுமையையும் வேற்றுமையையும் செம்மைப்படுத்தி (balancing) நிற்கும் நிலை. இன்பம் அன்றி நாம் துன்பத்தைத் தனித்து உணர்தலில்லை. துன்பம் அன்றி நாம் இன்பத்தைத் தனித்து உணர்தலில்லை. இன்பத்தையும் துன்பத்தையும் செம்மைப்படுத்தி (balancing) னால் அன்றி நாம் மேலான இன்பம் அடைதல் முடியாது. இவ்வாறான நிலையில் நமது அறிவும் உணர்வும் இருக்க இறைவன் நம்முடன் தொடர்புபட்டு நிற்கும் அத்துவித உண்மையை நாம் எவ்வாறு மூன்று வழக்கர்களும் (வாதிகளும்) கூறுகிறபடி ஒருநிலையில் வைத்து அறிதல் கூடும்? அறிஞர்கள் உய்த்துணர்க.

௯. பொருள் அடைவழக்கர் (விசிட்டாத்துவிதிகள்) கூறுகிற உடனிலையில் மற்றிரண்டு நிலைகளும் ஒருவாறு அடங்கியிருப்பதனால் சைவநெறி அத்துவித உண்மைக்கும் வைணவ நெறி அத்துவித உண்மைக்கும் சிறிது வேற்றுமையிருந்தாலும் மிக்க ஒற்றுமையும் உள்ளது. சைவநெறியில் வீடு அடைந்த ௬௩-நாயன்மார்களைப்போல வைணவ நெறியிலும் வீடு அடைந்த ௧௨-ஆழ்வார்கள் உளர். வீடு அடைந்த பெரியார்களிற் சிலர் இரு நெறியிலும் இழிகுலத்தாராயு மிருந்திருக்கிறார்கள். மற்றிரண்டு நிலைகளிலும் வீடு அடைந்த பெரியார்கள் வரலாறு வெளிப்படையாய் நாம் காண்பதில்லை. சைவ நெறியிலும் வைணவநெறியிலும் நமது நாடு எங்கும் கோயில்கள் காணப்படுதல்போல ஸ்மார்த்த நெறியில் கோயில்கள் காணப்படுதல் இல்லை. இந்த இரு நெறியிலும் இறைவனிடத்து அன்பு செய்யப்படுதல்போல ஸ்மார்த்த நெறியிற் காணப்படவில்லை. இந்த இரண்டு நெறியிலுள்ள மக்கள்தாம் பெரும்பாலும் நமது இந்திய நாட்டிலுள்ள பல இடங்களில் மக்கள் தங்குமிடமுதலிய அறநிலையங்கள் அமைத்துப் பொருள் வருவாய் ஏற்பாடும் செய்

திருக்கின்றார்கள். இரு நெறிகளிலுமுள்ள பெரியோர்கள் சாதி வேற்றுமை பாராட்டவில்லை. சிவபெருமானே பெற்றான் சாம்பான் என்ற பறையகுலப் பெரியாருக்குத் தீக்கை செய்யும் படி உமாபதி சிவாச்சாரிய சுவாமிகளுக்கு ஆணை தந்தனர். ஸ்மார்த்தநெறியில் சாதி வேற்றுமை மிகப் பாராட்டப்பட்டு வந்தது. வைணவநெறி ஆசாரியர் ஆகிய ராமாநுஜாச்சாரியார் எல்லாச் சாதியிலுள்ள மக்களையும் தமது நெறியிற் சேர்த்து அவர்களுக்கெல்லாம் அறிவுறுத்தி யருளினார். இந்தப் பரந்த நோக்கமும் விரிந்த அறிவும் ஸ்மார்த்தர்களிடம் இல்லை. அவர்கள் தங்கள் இனமக்களும் மற்றப் பிராமணர்களும் தவிரப் பிற மக்கள் அறிவு நூல்களைக் கற்க உரிமையுடையர் அல்லர் என்ற கொள்கையுடையர். அறிவு நூல்கள் மட்டுமன்றி அவைகள் எழுதப்பட்டுள்ள வடமொழியும் கூட பிறமக்கள் படித்தல் கூடாது என்ற குறுகிய ஒடுக்கக் கொள்கையைப் பொதுமக்கள் ஆட்சி உலகு எங்கும் பரவி வருகிற இக்காலத்திலுங்கூட அவர்கள் கூறிக்கொண்டிருப்பதை நாம் காணலாம். இப்பொழுதுங் கூட வடநூல் வல்ல ஒரு ஸ்மார்த்தர் பிறமக்களில் ஒருவருக்கு வடமொழி கற்றுக்கொடுத்தல் எளிதல்ல. இந்தக் கொள்கைகளும் இவைபோன்ற வேறு குறுகிய கொள்கைகள் தென் இந்தியாவில் எவ்வூரிலுமுள்ள ஸ்மார்த்தர்களிடம் பெரும்பாலும் பரவியிருப்பதை நாம் சாதி வேற்றுமை பாராட்டாத ஆங்கிலேயர் ஆட்சி ஏறக்குறைய உ௦௦ ஆண்டுகள் நடைபெறும் இக்காலத்திலுங்கூடக் காணலாம் என்றால் அதற்குமுன் அவர்கள் குறுங் கொடுங் கொள்கை எப்படியிருக்குமோ தெரியவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஒரே காரணந்தான். அதற்கு அடிப்படையாயுள்ளது அவர்களிடம் வழி வழியாய் வந்துள்ள ஸ்மார்த்தநெறிதான் என்று நாம் நினைக்கலாம். ஒன்று நிலையை மாத்திரம் ஒப்புக்கொண்டவர்களாய் தங்கள் இன மக்களிடத்தில் மிக்க அன்புடையவர்களாய் அவர்கள் உலகில் ஒழுகுகிறார்கள். வேறு நிலையைக் கொண்டதனால் அவர்கள் தங்களிடம் அறிதிறனிருந்தும் அறியாத பிறமக்களுக்கு அறிவுறுத்துதல் இல்லை; பிறமக்கள் எத்துணை அறிதிறனுடையவர்களாயிருக்கிறவர்களிடத்தும் தாங்கள் கேட்டு அறிந்துகொள்ளும் மனப்பான்மை அவர்களிடமில்லை. முயற்சித்திற னிருந்தும் அதன் வழியில் பொருளை மிக ஈட்டினும் அதில் ஒரு சிறு பகுதியை அவர்கள் பொதுமக்கள் நலத்துக்காகச் செலவுசெய்து அறநிலையங்கள் அமைப்பதில்லை. பிறமக்கள் அமைத்துவைத்த அறநிலையங்களைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ளச் சிறிதும் பின்வாங்குகிறதில்லை. ஸ்மார்த்த நெறிதான் பெரும்பாலுங் காரணமாயிருக்கிறது என்பதற்கு அந்த நெறியை வழுவின்றிப்

பாராட்டுகிற வைதீகர்களிடத்தில் இந்தக் குறுங்கொடுங் கொள் கைகள் நாம் மிக்குக் காண்பதே தக்க சான்றுகின்றது. ஆங்கி லம் படித்த உலகர்களிடம் இந்தக் கொள்கைகள் இப்பொழுது வர வரக் குறைந்து வருகிறதும் ஸ்மார்த்த குலத்திற் பிறந்தா லும் அதிற் பற்று இல்லாதவர்களிடம் இந்தக் கொடுமை முற்றி லும் நீங்கியிருப்பதும் நாம் காணலாம். இவர்கள் தங்கள் பிடிப்புக்கொள்கையை விட்டு உண்மை அறிமுறையில் அத்து வித உண்மையை உள்ளபடி ஆராய்ந்து அறிவார்களானல் பல் வகை மக்கள் ஒன்றுசேர்ந்து வாழ்ந்து நலமடையவேண்டிய இந்தக்காலத்துக்கு ஏற்ற விரிந்த கருத்துகளை யுடையவர்களாய் மிக்க நலம் அடைவார்கள்.

௧௦. இந்த மூன்று நிலைகளில் ஒவ்வொருநிலை நெறியையும் பற்றிச் சொன்ன ஆசிரியர்கள் அந்தந்தநிலை உண்மையை அதனை மறந்திருந்த மக்களுக்கு வற்புறுத்தும் பொருட்டுச் சொன்னர் கள் என்றும், ஒவ்வொரு நிலைக்கும் பிறநிலைகள் மேலே காட்டிய வாறு நெருங்கிய தொடர்புடையவைகள் என்றும் மூன்று வழக் கர்களும் அறிந்துகொள்ளுவார்களானல் அவர்கள் தங்கள் தங் கள் கொள்கையை மாத்திரம் விடாப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு பிறவழக்கர்கள் கொள்கைகளை இகழ்ந்து கூறமாட் டார்கள்.

௧௧. மக்களது உரிமை வழக்குகள் தீர்க்கப்படும் உரிமை வழக்கு மன்றங்களிலும் (Civil Court) தண்ட வழக்கு மன்றங் களிலும் (Criminal Court) இந்த மூன்று நிலைகளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை நாம் காணலாம். நடுச்செய்குநர் ஒருவர் வழக்காளி (வாதி) சொல்வதையும் எதிர்வழக்காளி (பிரதிவாதி) சொல்வதையும் கேட்டு இரு வேறு உரைகளையும் பிரித்தும் பொருத்தியும் ஆராய்ந்து பார்த்துத் தான் உண்மை இன்னது என்று அறிதல் கூடும். ஒருவர் சொன்ன உரைகளை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர் உண்மையை அறிதல் முடியாது. ஒன்றுநிலை வேறுநிலை, உடனிலை ஆகிய இந்த மூன்றுநிலைகளை யும் முறையே வழக்காளி எதிர்வழக்காளி, நடுச்செய்குநர் ஆகிய இந்த மூவரும் குறிக்கிறர்கள்.

௧௨. ஓர் குடும்பவாழ்வில் ஒரு கணவன் அறிவையும் அவன் மனையாள் அன்பையும் அவர்களிருவரும் சேர்ந்து பெற்ற குழந்தைச்செயலையும் குறிப்பதை நாம் உற்றுநோக்கி அறியலாம். கணவனும் மனையாளும் சேர்ந்து வாழ்ந்தாலன்றி குழந்தை உண்டாகாததுபோல அறிவும் அன்பும் சேர்ந்தா

லன்றிச் செயல் நிகழாது. இருபத்தஞ்சு வடிவங்களில் ஒன்றாகிய சோமாஸ்கந்த வடிவம் இந்த உண்மையைக் குறிப்பிடுகின்றது.

௩௫. இறைவனது அருள் விளக்கமாகிய இவ்வுலக இயற்கையில் இந்த மூன்றுநிலைத் தொடர்பு உண்மையை நாம் எங்கு பார்க்கினும் அங்கே எல்லாம் பரக்கக் காணலாம். ஆதலின் இந்த மூன்று நிலைகளும் ஒன்றுசேர்ந்த அத்துவித உண்மையே நிறைவான அத்துவித உண்மையாகும் என்றும் ஒவ்வொரு நிலையை மாத்திரம் கொண்ட அத்துவித உண்மையானது குறைபாடுடைய அத்துவித உண்மையாகும் என்றும் சித்தாந்த சைவர்கள் அறிந்து கடைப்பிடித்து ஒழுகுவார்களாக. பிற நெறியாளர்களும் இந்த உண்மையை ஆராய்ந்து அறிந்து உணர்ந்து ஒழுகுவார்களாக. மக்கள் எல்லாரும் அத்துவித உண்மையை அறிந்து ஒழுக எல்லாம் வல்ல இறைவன் திருவருள் செய்வாராக.

ஐந்தெழுத்து

[வீ. குமாரவேலுப் பிள்ளையவர்கள்.]

முற்காலத்தில் தமிழ் அறிஞர்கள் உள்ளத்தில் பொருளை எண்ணுதற்காக 'ஐந்தெழுத்தை'ச் சேர்த்து வைத்துள்ளார்கள் ஆதலின் ஐந்தெழுந்தை எண்ணுமற் சொல்வதில் பயனில்லையென்று ஆணையிற்கிளந்தனர். 'எண்ணுமல்' என்னும் சொற்கு உண்மைப்பொருள் காணமாட்டாதார் 'விரல்களை' மடக்குதல் கண்மணிக் கோவையிலுள்ள மணிகளைத் தள்ளுதல் ஆகிய இவற்ருல் இத்தனை தடவை யென்று எண்ணுமல் ஐந்தெழுத்தைச் சொல்வதில் பயனில்லை என்று பொருள் உரைக்கின்றனர். அது பொருந்தாது. 'உள்ளத்திற் பொருளை யெண்ணுமல் ஐந்தெழுத்தைச் சொல்வதிற் பயனில்லை' என்பதே பொருத்தமுடைய பொருளாம்.

ஐந்தெழுத்தில் முதல் எழுத்து முதற்கடவுளைக் குறிப்பதாம். முழுமுதற்கடவுள் பொருள்களெல்லாவற்றினும் சிறப்புடைய பொருளாகலின் அக்கடவுளைச் 'சிறப்பு' என வழங்கினர். 'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்னும் திருக்குறளில் நாயனர் கடவுளுக்குச் 'சிறப்பு' என்னும் பெயர் வழங்கினமை காண்க.

இனி அச் 'சிறப்புப்' பொருள் எத்தன்மைத்து? அதனால் நமக்குப் பயன் யாது? என்னும் வினாக்கள் எழுமன்றே. அவற்றிற்கு விடையாக இரண்டாம் எழுத்து அமைந்துள்ளது. அது முதற்கடவுளது தன்மையைக் குறிப்பதாம். 'வேண்டுவார் வேண்டுவதை ஈவது' முதற்கடவுளது தன்மை யாகலின் அதனை 'வண்மை' என வழங்கினர். திருவள்ளுவ நாயனார் திருக்குறள் நூலில் கடவுள் வாழ்த்தை யடுத்துக்கூறிய 'வான் சிறப்பை' 'வண்மை'ச் சிறப்பாகவே அறிஞர் கொள்வர்.

இங்ஙனம் முழுமுதற் கடவுளையும் அவரது வள்ளன்மையையும் உள்ளத்தில் எண்ணுதற் பொருட்டுச் 'சிவ' என்னும் இரண்டு எழுத்துக்களைத் தமிழ் அறிவோர் அடிக்கடி சொல்லுவார். இம் மறை மொழியையும் அதனை எண்ணுவதின் பயனையும் அடியில் வரும் திருமந்திரச் செய்யுளுள் காண்க.

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே."

இன்னும் 'வேண்டுவோர் யார்?' என்னும் வினாவிற்கு விடையாக மூன்றாம் எழுத்து அமைந்துள்ளது. அஃது உயிர்ப் பொருளைக் குறிப்பதாம். உயிர் 'யான்' என்னும் உணர்விற்கு உரியதாகலின் 'யான்' எனப்பட்டது. யாறு, யாடு, யார், யாமை, யாண்டு முதலிய யகர முதன் மொழியிற் பெரும்பாலன யகரமெய்யின்றி ஆறு, ஆடு, ஆர், ஆமை, ஆண்டு முதலியனவாக வழங்குதல் உண்மையின் உயிரும், 'ஆன்' என வழங்கப்படலாயிற்று. னகரவொற்றின்றி 'ஆ' என வழங்குதலும் உண்டு. எண்ணுவார்க்கு உள்ளம் ஓட்டம் இன்றி ஒடுங்க வேண்டுதல் இன்றியமையாத தொன்றாகலின் 'யா' என்பதை 'ய' என்று குறுக்கி அமைத்தனர். இங்ஙனம் குறுக்கி அமைத்தமையால் அது வேறு பொருளைக் குறியாதோ வெனின், குறியாது என்னை? 'ஆவோடல்லது யகர முதலாது' என்பது தொல்காப்பியச் சூத்திரம் ஆகலின்.

இனி உயிர் கடவுளைச் சார்ந்த வழி வேண்டியவற்றை அருளும். அவரது வண்மை சாராதவழி அருளுமோ அருளாதோ என்னும் ஐயத்தைப் போக்குவதற்கு நான்காம் எழுத்து அமைந்துள்ளது. அது கடவுள் தன்னைச் சாராத உயிர்க்குச் செய்யும் 'நன்மை' யைக் குறிப்பதாம். அதுவும் முதற்கடவுளது வண்மை

யே என்பதை உணர்த்த 'வ' கரத்தைத் தலைகீழாய் வைத்தாற் போன்ற வடிவுள்ள 'ந' கரம் அமைந்துள்ளது.

இன்னும் முதற் கடவுளைச் சாராத உயிர் எதனைச் சார்ந்திருக்கும்? என்னும் வினாவிற்கு விடையாக ஐந்தாம் எழுத்து அமைந்துள்ளது. அது 'மயக்கத்தை'க் குறிப்பதாம். அதனை 'மலம்' என்றும் சொல்லுவர். 'காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமங்கெடக் கெடும் நோய்' என்னும் குறளில் நாயனார் அதனை 'மயக்கம்' எனவே கூறிப்போந்தனர். முக்குற்றங்களுள் மயக்கமே ஏனையிரண்டினுக்கும் முதலாம். காமமும் வெகுளியும் மயக்கத்தின் விளைவே.

இவற்றுள் உயிர்ப் பொருளை யுணர்த்தும் 'ய' என்னும் எழுத்தின் வடிவு பத்து என்னும் எண்ணை யுணர்த்தும் எழுத்தின் வடிவு போன்று உள்ளது ஆதலின், உயிர்ப்பொருளாகிய தன்னை உணராதானை 'எட்டும் இரண்டும் அறியாத ஏழை' யென்ப. முதற் கடவுளது வண்மையை உணர்த்தும் 'வ' என்னும் எழுத்து தலைகீழாய் வைத்தாற் போன்று உள்ளது. ஆகலின் 'ந' கரத்தை ஊன்றிய திருவடி யெனவும், 'வ' கரத்தைத் தூக்கிய திருவடி யெனவும் தமிழ் ஆன்றோர் கூறுப.

தத்துவம்

கடவுள் உயிர்கட்கு அருள் செய்யும் பொருட்டு மெய் கொள்கின்றார். அம்மெய் நம்மனோர் கொள்ளும் கருமெய் போல்வது அன்று. அருள் மெய்யாம். அதனை இளங்கோ வடிகள் சிலப்பதிகாரத்தில் 'பிறவா யாக்கை' என்று கூறினர். அதனைத் தமிழ் அறிஞர் 'சிவமெய்' எனக் குறித்தனர். இதில் 'சி' என்பது சிறப்புப் பொருளாகிய கடவுளைக் குறிப்பதாம். 'வ' என்பது வேண்டுவார்க்கு வேண்டுவதை அருளும் 'வண்மை' யாகிய அருளைக் குறிப்பதாம்.

இனி மயக்கம் பற்றி உயிர்க்கு நுகர்ச்சியாம் மெய்யை 'ஆன்மமெய்' எனக் குறித்தனர். அதில் 'ஆன்' என்பது உயிரையும் 'ம' என்பது மயக்கத்தையும் குறிக்கும். 'ஆன்மமெய்' எனக் குறித்து 'ஆ' என்பது உயிரையும் 'ம' என்பது மயக்கத்தையும், நகர மெய் மயக்கம் பற்றிய உயிருக்கு அருளும் கடவுளது ஊன்றிய திருவடியையும் குறிக்கும் என்றும் சொல்லுப.

இன்னும் உயிர்க்கு அறிவு செயல் வேட்கையைச் சிறிதே விளக்கி வினைப்பயன் நுகர்தற்றன்மையை உண்டாக்கும் மெய்,

மரஞ்செடி கொடிகளாய் வளரும் தன்மையை யுடைய விதை போல்வது ஆகலின் அதனை 'வித்தியாமெய்' என விளம்பினர் தமிழ் அறிஞர். அதில் 'வித்து' என்பதை விதையையும் 'யா' என்பது உயிரையும் குறிக்கும்.

இங்ஙனம் சிவமெய், வித்தியாமெய், ஆன்மமெய் என மெய் மூவகைப்படுமாற்றை உணர்க.

உண்மை

காட்சிப் புலனுவதூஉம் கருத்துப் புலனுவதூஉம் என உண்மை இருதிறப்படும். சண்முக சிகாமணிக் கவிராயர் குமர குருபரர்க்குத் தந்தையார் என்பது காட்சிப்புலனுகிய உண்மை. உலகிற்கு முதற்கடவுளாகிய 'ஆதிபகவனே' உயிர்கட்கெல்லாம் அம்மையப்பர் என்பது கருத்துப்புலனுகிய உண்மை.

பெற்றோரை யறியாத கபிலர் 'ஆதிபகவனே' தமக்கு அம் மையப்பர் என்றார். இது மறுக்கக் கூடாததொரு கருத்துப்புல னுகிய உண்மை. 'ஆதி'த்தாய் கருவூரினள் என்றார்: அஃதும் அன்னதே.

இன்னும் கபிலர் 'உயர்வு இழிவு ஒருவற்கு அறிவொழுக்கம் பற்றி உண்டாகுமே யன்றிப் பிறப்புப்பற்றி உண்டாதல் இல்லை' என்னும் கொள்கையினர். ஔவை, திருவள்ளுவர் முதலாயினு ரும் அக்கொள்கையினரே. ஒரு திறப்பட்ட கொள்கையினரை உடன் பிறந்தார் எனக் கூறுதல் உலக இயல். ஆகலின் ஔவை முதலாயினரைக் கபிலர் தமக்கு உடன் பிறந்தார் எனக்கூறினர்.

இவ்விரு திறப்பட்ட உண்மைகள் கபிலர் முதலாயினர் வர லாறுகளில் விரவிக் காணப்படுகின்றன. அவற்றை வேறு படுத்தி ஆராய்தல் விரும்பற்பாலது.

கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா

[பல்லாவரம், மறைமலையடிகள்]

(௫-ம் சிலம்பு, ௭௩௯-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆகவே சிற்றுயிர்களுக்குச், சிற்றுயிர்களின் அறிவுக்கு நினைவுக்கு எட்டாத நிலையில் நிற்குங் கடவுளை அவ்வுயிர்களின் அறிவுக்கும் நினைவுக்கும் காட்சிக்குங்கூட எட்டிய நிலையிலே எளிதாகக் கொண்டுவந்து காட்ட வல்லது கடவுளிடத்துள்ள அருட்டன்மையே என்பது நன்கு விளங்கற் பாலதாம். கடவுள் மற்றை எல்லா உயர்ந்த தன்மைகளும் உடையராயிருப்பினும் அவ்வருட்டன்மை ஒன்றுமட்டும் இலராயின் இவ்வுலகத்தை யும் இவ்வுலகத்துற்ற உயிர்களையும் நாம் காண்டலியலாது. பிறர்படுந் துன்பத்தைக் கண்டு இரக்கப்படாத ஒருவன் அவர் கட்கு ஏதோர் உதவியுஞ் செய்யக் கண்டதுண்டோ? இரக்கமும் ஈர நெஞ்சமும் இல்லாதவர்கள் பிறரோடு அன்பாய்ப் பேசினும் எங்கே அவர்க்கு உதவிசெய்ய நேர்ந்துவிடுமோ என்று நெஞ் சம் நடுநடுங்கிப் பிறரோடு பேசாதும் அவரோடு அளவளாவா தும் தனித்துறவு நிலையை அடைதலைக் கண்டாமன்றோ? இத் தகைய துறவிகளுள்ளே கடவுளும் ஒருவராய் விடுவராயின், எமது உயிர்வாழ்க்கை இவ்வுலகத்தில் நடைபெறுமென்று கன விலும் நினைதல் கூடுமோ? ஆதலினாலன்றே, நம் சைவசமயத் தெய்வமாகிய சிவபிரான் தன்னை இத்தகைய துறவுநிலையில் சேர்த்துக்கொள்ளாது கங்கையும் உமையுமாக இரு மனைவியரை யும் பிள்ளையார் முருகனென்னும், இரண்டு மக்களையும் உடைய ராய்த் தனக்கு அன்பே வடிவென்பதை உணர்த்தலாயினான். இவ்வருட்பே ருண்மை மற்றோரிடத்தும் நம் மாணிக்கவாசகப் பெருமானால்,

> "தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
> பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
> பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
> விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்று அறிவுறுத்தப்பட்டது.

அன்பர்களே! இங்கே யாம் கூறியதுகொண்டு எல் லாம் வல்ல முதல்வனுக்கு மனைவிமாரும் மக்களும் உளர்போ லும் என நினைந்து நமது முழுமுதற் றெய்வத்தை இழிவாக நினைந்து விடேன்மின்! மனைவி மக்களென்ற தொடர்பெல்லாம் அன்பினைப் புலப்படுத்தும் அடையாளங்களேயாம். அன்பும் இன்பமுமாகிய தன் னியல்புகள் தன்னோடு தொடர்புடையா ரிடத்துப் புலனாவனவன்றி வேறு தாமாகவே புலனாவனவல்ல இறைவனுடைய அன்பையும் இன்பத்தையும் பெறுதற்கு உரிமை உடையராய் அவனை நெருங்கி நிற்கும் நாமெல்லாம்

அவனுக்கு மனைவியரும் மக்களுமே யாவம். மனைவி மக்களென்ற தொடர்புகளின் உண்மையை ஆழ்ந்து ஆராயுமிடத்து அவை அன்பென்னும் விதையில் முளைத்தெழுந்து ஓங்கிப் படர்ந்த தேமாவின் தேனொழுகு கனிகளேயாம். இன்னும் இதனை நுணுகி நோக்குமிடத்து உலகமெங்கணும் புலனுகாது மறைந்து நிற்கும் ஒளியினையும் கத கதப்பினையும் புலனுகக் காட்டும் திங்களும் ஞாயிறுமே அத்தொடர்புகளாம் என்று கருதுதலும் இழுக்காது. இந்த முறையிலேதான் கடவுளுக்கும் சிற்றுயிர்களாகிய எமக்கும் உள்ள தொடர்பு கருதற்பாற்றென்புதற்கே சிவபெருமானுக்கு மனைவியரும் மக்களும் உளராக வைத்துப் புனைந்துரை வகையால் ஆன்றோர் கூறுவாராயினர். இதுகொண்டு கடவுள் தாம் எட்டா நிலையினராயினும் தாம் அந்நிலையிலேயே இருக்கும் விருப்பு இலராய் எமக்குத் தமது பேரின்பத்தை வழங்குதற் பொருட்டு எழுந்த பேர் அருட்டன்மையால் எமக்கு எளியராய் எமக்கு அணுக்கராய் யாம் வேண்டியவாறெல்லாம் வந்து உதவிசெய்யும் சிறப்பியல்பு வாய்ந்தவரென்பதே அறிதல்வேண்டும். இது வெறுஞ் சொல்லளவில் நில்லாது உண்மையாக நிகழ்வதாதலை மாணிக்கவாசகப் பெருமான் தமக்கு இறைவன்கட் புலனுக எழுந்தருளி வந்து அருள்செய்த உண்மை அருள் நிகழ்ச்சியை ஒரெடுத்துக் காட்டாய்க் கூறுவான் புகுந்து,

> "நாட்டார்கள் விழித்திருக்க ஞாலத் துள்ளே
> நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
> காட்டா தனவெல்லாங் காட்டி"

என்று அருளிச் செய்வாராயினர்.

இதன்கண் 'நாட்டார்கள் விழித்திருக்க' என்றது உலகத்திலுள்ள மக்களெல்லாரும் இறைவனைக் காண்டற்கும் அவன்றன் அருள் உதவியைப் பெறுதற்கும் வேட்கை பெரிதுடையராய் இறைவன் தமக்குமுற் புலப்படும் நேரத்தை எதிர்பார்த்து அதிலே கண்ணுங் கருத்துமுடையராய் முனைந்து நிற்றலை விளக்காநிற்கும். மக்களுள் எத்துணை இழிந்தோரும் கடவுளென்னுஞ் சொல்லைக் கேட்ட அளவானே அவனைக்காண்டலில் வேட்கையுங் கருத்தும் உடையரா யிருக்கின்றனர். அவ்வாறவர் வேட்கை மிகுந்துள்ளாராயினும் அவ் வேட்கையின்படி கடவுளைக் காணும் முயற்சியிலேயே அழுந்தி நிற்கமாட்டாமல் உலக இன்பங்களில் இழுப்புண்டு போதலின், அவர் கொண்ட வேட்கை கைகூடாது ஒழிகின்றது. இவரங்ஙன மொழிய, இப்பொதுமக்களின் வேறுன சிலர் பெரு வேட்கையும் பெரு முயற்சியும் உடையராய்த் தவமுயற்சியிற் புகுந்து கடவுளைக்

காண்டலிலேயே கருத்து ஒருங்கி நிற்பர். அங்ஙனம் நிற்பார்க்குங்கூட இறைவன் கட்புலனாய்த்தோன்றி அருள்செய்யாது தமக்கு அவன் நேரே தோன்றி அருள்செய்த அருட் பெருந்திறத்தை மாணிக்கவாசகப் பெருமான் 'ஞாலத்துள்ளே நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே, காட்டாதன வெல்லாங் காட்டி'' என்று அருளிச்செய்வாராயினர். இங்ஙனமே பிறிதோரிடத்தும்,

"மரகதக் குவாஅ மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகஞ் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறிவு ஒளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலிற்
றாடளை இடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்
தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்

என்று அடிகள் திருவாய் மலர்ந்தமை காண்க.

அற்றேல், தவமுயற்சியிற் புகுந்த முனிவரராலும் அறியப் படாத முதல்வனை அத்தவ முயற்சியின்றி அரசவாழ்க்கையி லிருந்த மாணிக்கவாசகர் அதனது அருளை நேரே பெற்றன ரென்றலும், தம்மை நோக்கித் தவம்புரிந்த முனிவரர்க்கு அருள் வழங்காது அம்முயற்சிக்குப் புறம்பாய் நின்ற அடிகளுக்கு அவ்வருளை வழங்கினா னென்றலும் இறைவனது அருட் டன்மைக்கு இழுக்காதோ எனின் (தொடரும்)

தமிழ் நாட்டுச் சைவ இளைஞர் கடமை

[S. சின்ன தம்பி அவர்கள்]

(௫-ம் சிலம்பின் ௬௫௬-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி நம் சமயத்தொடர்பாக மணவினை பிணவினைக் காலங்களில் நிகழ்த்தும் சடங்கு முறைகளைப்பற்றி ஒரு சிறிதாராய வேண்டியிருக்கிறது. மணமெனப்படுவது நம் நாட்டாரால் எட்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளுள் சிறந்தது நம் அருமைத் தமிழ் மக்கள் கொண்ட களவெனுங் காதல்மணமே யாகும். தலைவன் தலைவியார் தாமே தத்தம் மனதிற்கிசைந்த ஒருவரைத் தேடிக்கூடும் விழுமிய ஒழுக்கமே காதல் மணமாகிய களவெனப்படுவது. இம்முறையைப் பாராட்டியதனானன்றே தமிழ் நாடு கற்புக்கு நிலைக்களமாயிருந்தது மென்க. இக்காதல் மணம் எம் நாட்டில் இப்பொழுது ஆரியரது சூழ்ச்சியால் மாண்டு விட்டது. இல்லற மாண்பிற்கும் கற்புக்கும் காதலின்பத்திற்கும் தலை சிறந்ததாகிய களவுப் புணர்ச்சியை இழித்துக்கூறிய ஆரிய மக்கள்தம் அறிவின்மையையும், அன்னார் புல்லிய உரையைக் கேட்டு மயங்கிய தமிழ் மக்கள்தம் புல்லறிவையும் என்னென்பேம். இதுவும் தமிழ் மக்களது தவக்குறைவேகொல்! தமிழ் நூல்கட்கெல்லாம் ஒப்பமுடிந்ததாய் உலகியல் நிறுத்தும் பொருள் மரபென்று இறைவனாற் போற்றப்பட்டதாய்ப் பண்டு தொட்டுத் தமிழ் மக்களால் இயற்கை முறை யென்று ஓம்பப் பட்டு வந்ததாகிய இக்களவியல் முறையை விடுத்துக் காதல் மாண்பிற்குப் பெரிதும் ஒவ்வாத ஆரியரது மணமுறைகளைத் தழுவுவது தமிழ் மக்களாகிய எம்மனோர்க்கு ஒரு சிறிதும் அடாதென்றறிக. அன்னார் மணக்கிரியைகளும் பெரும் போலித் தன்மையுடையனவென்பது அடியனது உறுதியான துணிபு. தலைவன் தலைவியது விருப்பங்கேட்காது தாய் தந்தையர் பார்த்துக்கொணரும் பெண்ணுக்கும் ஆணுக்கும் மணமுடிப்பதே நமது நாட்டில் இப்பொழுது பெரிதும் வழங்கி வருகிறது. இதற்குப் பெயர் தெய்வ மணமாம்! இதைக் காமமணமென்றும் அடிமை மணமென்றுங் கொள்ளலே சால்புடைத்தென்று கூறுவேன். களவியல் நுட்பமுணராது காதல் கரக்கப்பட்ட இக்காலமே பஞ்ச காலம். மக்கட்கு இயல்பாயமைந்துள்ள இவ் விழுமிய மணமுறை இழித்துரைக்கப்பட்ட நாட்டொட்டே பெண் தெய்வங்களெல்லாம் காமப் பேய்களெனும் புல்லிய கொள்கை நம் நாட்டிற் புகுந்து இல்லற வாழ்வின் பெருமையைப் பெரிதும் குலைத்து எம்மனோரை யெல்லாம் பாழாக்கி

விட்டது. அருந்தமிழ்ச் செல்வர்காள்! எழுமையுந் தொடர்ந்த உழுவலன்பினால் உந்தப்பெற்றுத் தெய்வத்தின்றுணைகொண்டு ஏனையோர் ஏவலின்றி ஒருவனும் ஒருத்தியும் தம்முள் தாமே இயல்பாய் மனமொப்பக்கண்டு கூடி வாழ்தலே இயற்கை வாழ்வென்பதை நன்றாய் உணர்மின்! இதுவே தெய்வ மணமென்று அழைக்கும் தகைமையுடைத்து. எல்லாத் துறைகளிலும் இயற்கையோடியைந்த வாழ்வையே எம்முன்னோர் கைக்கொண்டனர் என்பதை இனிமேலாகுதல் நீவிர் உணர்தல் வேண்டும். ஆரிய மக்களது செயற்கை முறையிற் சிக்குண்டு எம் சீரிய வாழ்வைச் சிதையாது இயற்கை இன்பம் கனிந்த காதல் மணத்தை நாடெங்கும் கமழச்செய்மின்! இது நிற்க. இக்கால மணமுறைதான் சிறப்பிழந்திவ்வாறிருப்ப, இந்நாள் மணக் கிரியைகள்தாம் எவ்வாறாமோவெனின், அவைதாமும் ஆரியப் பார்ப்பார்க்கு அரும்பொருள் அளிக்கும் ஒன்றினையே குறிக்கொண்டு பெரும்போலித் தன்மை யுடைத்தாயிருக்கின்றன. மணவினை யென்பது மக்கள் வினைகளுளெல்லாம் தலைசிறந்ததென்பதை எவரும் மறுக்க மாட்டார். எனவே இவ்வுயரிய வினையை அதன் பெருமைக் குகந்தவாறு அப்பன் நிலையத்தில் நிகழ்த்துவதே சாலுமன்றி நம்மில்லங்களில் நிகழ்த்துவது சிறந்ததாகத் தோற்றவில்லை. பெற்றோர் முதலியோரால் வதுவையாற்றப்படும் மண மகனுக்கும் மண மகளுக்கும் ஒருவரை யொருவர் மண நாளுக்கு முன் அறிந்து கொள்ளல் கூடாதாகையான், அன்னோர் ஒருவர்பால் ஒருவர் இயல்பாய்க் காதல் கொள்ளல் இயலாது. எனவே இவர்கட்குக் காதலின் சிறப்பைப்பற்றியும், கற்பு மாண்பைப் பற்றியும், கண்ணகியார், மங்கையர்க்கரசியார் திலகவதியார் முதலிய கற்பரசிகள்தம் பொற்புடை ஒழுக்கம் பொருந்திய விழுமிய வரலாறுகள் வாயிலாக எடுத்துக்காட்டல் வேண்டும். தமிழ் மறையாகிய திருக்குறளின்கண் நுவலப்பட்ட இல்லறக் கருத்துக்களை யெல்லாம் மண மக்கட்கு விளக்கிக்காட்டி இவற்றை யெல்லாம் அன்னோர் மனதிற் பதித்துவிடல் வேண்டும். மணத்தின் செம்மையை யுணர்த்தும் இவ்வினையே (மேற்கூறிய அறிவுரை நிகழ்த்தல்) மணவினைகளுள் முதல் வினையாக இருத்தல் வேண்டும். இவ்வினை முடிந்ததும் வேண்டினோர் வேண்டியவாறெல்லாம் ஈந்தருளும் தடங்கருணைப் பெருங்கடலாகிய எம் அப்பனைச் சுந்தரர் பரவையைப் பெறுவான் வழுத்தியதுபோல் தேவார திருவாசக மாதியவற்றை ஓதி மணமகன் தனது காதற் சின்னமாகிய மங்கல அணியை மணமகள் கழுத்தில் இடலும், அவ்வண்ணமே மணமகளும் தனது காதற்கோர் அறிகுறியாக மங்கல அணியொன்றை மண மகனுக்கு அளித்தலும் ஆகிய இம்முறைகளைச் செய்தல் சால்

புடைத்தென்று தோற்றுகிறது. ஆயின் பார்ப்பார்தம் துணைக் கொண்டு வேதமோதித் தீ வளர்த்துத் தீ வலஞ்செய்து கருங் கல்லின்மேல் மண மகளை மிதிக்கச்செய்து கொள்ளும் ஆரிய முறைகளெல்லாம் நம் அறிவிற்கு ஒரு சிறிதேனும் பொருத்த மாகத் தோற்றவில்லை. எனவே, யாம் மேற்கூறிய திருத்தங்களை யுள்ளிட்ட முறைகளையும், அவற்றின் சார்பாய வினைகளையும் ஆற்றுதலே தமிழ் மக்கட்குகந்ததெனக் கூறுவேன். அறி வுடையார் கருத்தும் இவற்றிற்கு உடன்பாடாயிருக்குமென எண்ணுகிறேன். சமயச் சார்பாக உள்ள குறைகளை மாத்திரம் இயம்புவதே யொழியத் திருத்தங்கள் வகுக்கும் ஆற்றலும் அறி வும் அடியேனுக்கு ஒரு சிறிதுமில்லாமையாலும் அவையெலாம் அறிவுடையார்க்குரிய தொண்டே யாகலானும், மேற்கூறிய பொருள்பற்றி மேன் மேலும் விரிக்காது இவ்வளவு குறிப்புட னும் நிறுத்திப் பிணவினைகளைப்பற்றி ஒரு சிறிது சுட்டுவாம்.

சமயச் சார்பாகவுள்ள வினைகளுளெல்லாம் பிணவினைகளே பார்ப்பாருக்குப் பெரும் 'பொருள் பெறுவிக்கும் பான்மை யுடைத்தாயிருக்கின்றன. உயிரற்ற உடலைப் புனைந்து மகிழ்வது போலப் பெரிதும் மடைமைத்தனமாய் யாம் செய்யும் பிணக் கிரியைகள் பெரும்போலி முறைகளே யாமென்றறிக. என்னை? இறந்தார்க்கிரங்கிச் சிவத்தை வேண்டி அவர்களை யெல்லாம் மறுமையில் நன்னெறிக்கணுய்க்குமாறு வேண்டும் உயரிய நோக் கங் கொண்டே இக்கிரியைகளும். அதன்வினைகளும் ஆற்றப்படல் வேண்டும். யாம் கொண்டுள்ள நோக்கத்திற்குரிய பயனைத்தரு வது பார்ப்பார்க்கு ஈதல் ஒன்றுமே போதும். 'வறியார்க் கொன்றீவதே யீகை' என்பது பொய்யா மொழி. ஆயின் நாளொன்றுக் கொருகூழேனும் இல்லாது வறுமைக்கணின்று உழலும் பல்லாயிரக் கணக்கான வறியவர்களிருப்ப, அவர்கட் கொன்று மீயாது, அறுசுவை கனிந்த நல்லமுது நாளுக்கு மூன்று வேளையும் மூக்குமுட்டத் தின்று தேக்கியிருக்கும் பார்ப் பாருக்கு ஈவது ஈகையாமோ! இப்பார்ப்பன மக்களுக்கு மூட்டை மூட்டையாகப் பொருளைக் கட்டிக்கொடுத்து விட்டால் இறந்த உயிருக்குப் புண்ணியமாம் என்ற பேய்க்கொள்கை எப்போதுதான் எம் நாட்டை விட்டகலுமோ தெரியவில்லை. இறந்த உயிரானது மறுமைக்கண் நன்னிலை யெய்தவேணுமென்ற அவா இறந்தானது மக்கட்கேனும் சுற்றத்தார்க்கேனும் உண் டேல், அவர்கள் அவ்வுயிருக்கு அருள் புரியுமாறு இறைவனை வழுத்திச் சிவனடியார்க்கு விருந்தளித்தலும், வறியார்க்கீதலும் திருக்கோயில் எழுப்புதலும், கல்விக்கழகம் சமைத்தலும், கற் றார்க்கு உதவுதலுமாகிய திருத்தொண்டுகளைத் தங்களாலியன்ற

அளவிற்கு ஆற்றினால் அவ்வுயிருக்கு இறையருள் ஓர் அளவிற் கிடைக்குமெனஏற்றுக்கொள்ளலாமே யொழியப் பார்ப்பார்க் குப் பொருள் கொடுத்தல் மாத்திரமே சாலுமென்றது ஓர் எள் துணையேனும் நம்புதற்கு இடமில்லை. சிவநெறிச் செல்வர்காள்! சிவநிந்தனை செய்யும் சுமார்த்தர்களாகிய ஆரியப்பார்ப்பார்க்கு ஈதல் அறமென்னும் தப்புக்கொள்கையை விடுத்துச் சைவம் வளர்தற்குரிய பெரு முறைகளில் நும் பொருளைச் செலவளித்து நுமக்கும் இறந்தோர்க்கும் ஏனையோர்க்கும் ஆக்கம் தேடியுய்யு மாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

இதுகாறுங் கூறியவற்றால் நம் நாட்டிடைத் தற்போழ்து சமயத்தொடர்பாக நிலவும் ஒரு சில தப்புக்கொள்கைகள் மாத் திரம் சுட்டப்பட்டதே ஒழிய, நம் சமய வளர்ச்சி குறித்துச் செய்யவேண்டிய சிறந்த தொண்டுகள் செப்பப்படவில்லை. சம யத்தொண்டு பலதுறைப்பட்டுக் கிடக்கின்றது. ஆயின் தொண்ட ரின்மையே பெரியதோர் குறையாயிருக்கின்றது. இது காலை அத்தி பூத்ததுபோல் ஆங்காங்கு அன்பர் சிலர் சமயப் பிர சாரஞ்செய்து வருவது ஒருவாறு ஊக்கமளிப்பதாயிருக்கின் றது. ஆயின் நம் சமயமானது உய்யவேண்டின் இறைபணி விழைவின் மிக்க இளைஞர் பலர் சேர்ந்து நாட்டைக் கலக்குதல் வேண்டும். ஒவ்வோரிளைஞனும் அழியும் இவ்வுடலை அழியாப் புகழை நிறுவுவதிற் பயன்படுத்துவே னென்று இறுமாந்து எவற்றினும் விழுமிதாகிய சமயத் தொண்டாற்றுதற்கு முன் வருவனேல் நம் சமயமானது வெகு விரைவிற் சீர்நிலை யெய்தல் கூடும். இத்தகைய மனப்பான்மையும், சமயப்பற்றும் நம் இளை ஞர்பால் எழவிடாது தகைந்து நிற்பன அப்பிற மதப் பாட சாலைகளுக்குக் கல்விகற்க விடுவதும், ஆண்டுற்ற பிறசமய ஆசிரி யர்களாற் கற்பிக்கப்படும் சிவ நிந்தனையுமே யென்று முதன்மை யாகக் கூறலாம். கிறித்துவமதப் பாதிரிமார்களும், அவர் தம் கல்விச் சாலைகளும் எம்நாட்டிற்கும் சமயத்திற்கும் இதுகாறும் இழைத்துவந்த இடர் இம் மாத்திரம் என்று இயம்பமுடியாது. ‘எம் நாட்டிலிருந்து இப்பாதிரிமார்களையும் அவர்தம் சமயச் சார்பாக நிறுவப்பட்ட கழகங்களையும் பொறுக்கிக்கொண்டு போய்க் கடலுட் பாய்ச்சினலோ’ வென்று இவைதம் புன் மையை நினைக்குந்தோறெல்லாம் மனத்தில் வன்மம் எழுகின் றது. எம் நெறியின் ஒப்பற்ற செம்மையை ஒரு சிறிதேனும் உணராத பாதிரிமார்கள் எம் பாலர்களைத் தம்பாலீர்த்துக் கவர்ந்து கொள்ளும் சூழ்ச்சிகளைச் சென்ற நூறாண்டுகளாகக் கண்டுகொண்டிருந்தும், அன்னவர்பாற் றம் அருமைப் புதல் வர்களை மேன்மேலும் அனுப்பும் நம் நாட்டவர் தம் அறி

வின்மை தான் இருந்தவாறென்னே! நம் நாட்டில் சைவ சமயப் பாட சாலைகள் மக்கட்டொகுதிக் கேற்பப் போதிய அளவு இன்மையே இதற்கோர் காரணமாகக் கூறலாம். எனவே சமயத் தொண்டுள் தற்போழ்து பெரிதும் வேண்டப்படுவது யாதெனின் சிவநெறிப் பாடசாலைகள் பலவற்றை ஊர்கடோறும் நிறுவுதலே யாமென்க. யாழ்ப்பாணத்திலே இத்துறையின் பெருந்தொண்டு ஆற்றப்பட்டு வருவது அன்பர்களனைவர்க்கும் பெருமகிழ் வளிக்கின்றது. பாதிரி மார்களால் நம் சமயத்திற்கு உற்ற ஊறுகண்டு பெரிதும் மனங்கவன்ற செல்வத் திருவாளர் S. R. இராசரத்தினம் அவர்கள் (Advocate) ஊர்கடோறுஞ் சென்று தம் மருமைச் சொற்பொழிவுகள் வாயிலாக நாட்டார் மனத்தை யெல்லாங் கலக்கிப் பிறமதப் பாட சாலைகளுக்கு இதுகாறும் சென்றுவந்த நூற்றுக்கணக்கான சைவ மாணவர்களை யெல்லாம் சைவ பாட சாலைகளுக்குப் போமாறு தூண்டியும், குறிச்சிக்கொரு சைவப் பாட சாலையாகப் பல பாடசாலைகளை நிறுவியும் செய்துவரும் தொண்டு பெரிதும் போற்றற்பாலது. இது போன்ற தொண்டு தென்னிந்தியாவிலும் நிகழுமேற் பிற சமய இருளை மிகு விரைவிற் செதுக்கி விடலாமன்றே!

இக்கால இளைஞர்பால் சமய உணர்ச்சியின்மைக்குப் பிறிதோர் காரணங் கூறல் கூடும். அதுவும் சமய நூல்களெல்லாம் செய்யுள் நடையா யிருப்பதானும், மாணாக்கர்கள் (இளைஞர்) எளிதிற் பயின்று கொள்ளும் தன்மைத்தாய சமய நூல்கள் உரை நடையிற் போதிய அளவு இதுகாறும் எழுதப்படாமையானும், தற்காலப் பூதபௌதிக நூலாராய்ச்சிக்கிணங்க நம் சமயப் பெரு நூல்கள் இதுகாறும் விளக்கப்படாமையானும் நம் இளைஞர்கள் பெரிதும் இடர்ப்படுவதைக்காண்டும். ஆயின் இத்துறைகளிலும் ஒரு சில மெய்யன்பர்கள் தென்னிந்தியாவின் கண் தொண்டு செய்து வருவதுகண்டு பெருமகிழ் வெய்தினும். பொருள்களை நுனித்தறியும் நுண்ணறிவும், ஆராய்ச்சி வன்மையும், ஒப்பற்ற தமிழ்ப் புலமையும் மிக்க செந்நெறிச் செல்வராகிய மறைமலையடிகளானும் (சுவாமி வேதாசலம்) செந்தமிழ் மொழியின் விழுத்தகு கல்வியும், ஆங்கில மொழியின் பழுத்த புலமையும் திறம்படப் பெற்றுத்திகழும் திருமிகு, கா. சுப்பிரமணியபிள்ளை அவர்களானும் ஏனை ஒரு சிலரானும் மாணாக்கர்க்கும் ஏனையோர்க்கும் பயன்படு முறையாக எழுதப்பட்டு வரும் சொல்வள மிக்க ஆராய்ச்சி நூல்கள் இளைஞர்பால் சமயப்பற்று தமிழ்ப்பற்று முதலிய விழுமிய விதைகளை விதைத்து விடுகின்றன. இப்பெரியார்தம் அரிய நூல்களின் துணை கொண்டு சைவ சமயப் பெருமையுணர்ந்த இளைஞர்

பலர் சமயத்தொண்டில் முனைத்து நிற்கும் பெருமை யொன்றுமே அன்னார் தம் அறிவிற்கும் தொண்டிற்கும் போதிய சான்றும். இவர்களைப் போன்ற பெரியார் பலர் முன்வந்து இத்துறையில் உழைப்பார்களேற் சைவ சமூகம் வெகு விரைவில் அறிவு விளக்கமுறூஉம் என்பது உறுதியே யாம்.

சமயத்தொண்டு திறம்பட ஆற்றுதற்குச் சபைகள் முதலிய கழகங்களே பெரும்பயன் தருவன. ஊர்கடோறும் சைவ நெறிக் கழகங்களை நிறுவி அவைதம் வாயிலாகச் சமயப் பிரசாரம் செய்தலே சிறந்த முறை யென்க. சபைகள் வாயிலாகக் கொலை புலை தவிர்ந்த அருளொழுக்கத்தையும் சிவசின்னங்களின் மாண்பையும் திருவைந்தெழுத் துபதேசத்தின் சிறப்பையும் நாட்டில் நிலவச் செய்தல் வேண்டும். இன்னோரன்ன நோக்கங்களையுடைய சபைகளெல்லாம் இவற்றிற்கெல்லாம் மேலாயவோர் சபையின் கிளைகளாயிருந்து ஒற்றுமையாய் உழைத்தல் சால்புடைத்தாயிருக்கும். இப்போதுள்ள சைவ சபைகளெல்லாம் பெரும்பாலும் ஆண்டுக்கொருமுறை விழாக்கொண்டாடி மகிழும் தன்மையுடைத்தாயிருப்பனவே யொழிய உண்மைப் பணிசெய்வதில் முனைத்து நிற்பதாகத் தெரியவில்லை. எனவே இதுகாறுங் கூறியவற்றால் சைவர்களாகிய யாம் அனைவரும் கருத்திற் பதித்துக் கொள்ள வேண்டிய ஒரு சில காரியங்கள் தெளியப்படும். ஆயின் இக்கட்டுரையில் விரித்துள்ள கொள்கைகளுட் பெரும்பாலும் இந்நாள் நம் நாட்டின்கணுள்ள முதியோர்களாலும் ஏனையவருள் ஆரிய மொழிப்பற்றுடைய அறிவுடையோராலும் ஏற்றுக்கொள்ளும் பெருமை வாய்ந்தில வாகையானும், அடியேனைப் போன்ற இளைஞர்கட்கே இக்கொள்கைகளெல்லாம் உடன்பாடாயிருக்கு மாகையானும் இக்கட்டுரை "தமிழ்நாட்டுச் சைவ இளைஞர் கடமை" என்ற தலைப்புடன் எழுதப்பட்டது. ஒரு நாட்டின் சிறப்பை ஆக்குவதும் அழிப்பதும் அந்நாட்டு இளைஞர்களே என்பது எமக்கெல்லாம் தெரிந்த தொன்றாகையால், நம் நாட்டையும் சமயத்தையும் விலங்குபோல் பிணித்திருப்பதாகிய குருட்டு நம்பிக்கைகளையும் போலிக் கட்டுப்பாடுகளையும் வீரவாள்கொண்டு வெட்டியெறிந்து திருஞான சம்பந்தர் முதலிய அறவாழி அந்தணர்கள் நின்றாடும் அருளொளி வீட்டிற்குரிய நெறியை யாமெல்லாம் அறிந்துய்தற்குரிய தொண்டுகளைச் செய்வதற்கு வேண்டிய அறிவையும் ஊக்கத்தையும் எம் போன்றார்க்குத் தந்தருளுமாறு அப்பன் மலரடிகளை வழுத்தி முடிப்பாம்.

தமிழாசிரிய மாணவர் வழிமுறை விளக்கம். Part I.

(மயிலை. சீனி. வேங்கடசாமி தொகுத்தெழுதியது)

உயர்திரு. சிவஞான சுவாமிகள்.
(கி. பி. 1785-ல் சிவகதி)

|

திருத்தணிகை. கச்சியப்ப முனிவர்
(கி. பி. 1790 சிவகதி)

|

திருத்தணிகை. கந்தப் பையர்.

|

மகாவித்வான், உரையாசிரியர்
காஞ்சி. சபாபதி முதலியார்

- அஷ்டாவதானம் புரசை. சபாபதி முதலியார்
  - காஞ்சி. கனகசபை நாயகர் (காஞ்சிப்புராண வசனம்) இயற்றியவர்.
  - வித்துவான்மயிலை. சண்முகம் பிள்ளை (இலக்கியம் பயின்றூர்) (கி.பி. 1905 காலமானுர்)
    - ஆசிரியர் கா. ரா. நமச்சிவாய முதலியார்.
    - திருமயிலை, சீனி. கோவிந்தராசன். (திருக்குறள் நாடகம், திருமயிலை நான்மணிமாலை இயற்றினுர்.)
- சிதம்பரம் சபாபதி பிள்ளை* பரசுராம பிள்ளை
  - புராணிகர் சுந்தரம் பிள்ளை
    - புராணிகர் வடிவேற் பிள்ளை (சிதம்பரம் சபாபதி பிள்ளையின் புதல்வர்)

குறிப்பு :— * இவ்விருவரும் அருட்பா இராமலிங்க சுவாமிகளின் உடன்பிறந்தார்கள்.

ஸ்ரீமத். மாதவச் சிவஞானசுவாமிகளைப்பற்றிய ஐயவினா.

ஸ்ரீமத். மாதவச் சிவஞான சுவாமிகள் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் இயற்றியுள்ள அருந்தொண்டை யறியாதார் யார்? அப்பெரியார் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவரென்பதும் கி. பி. 1785-ல் அந்தமிலின்பத்து அழிவில்வீடெய்தினர் என்பதும் உலகமறிந்த உண்மையேயாம். அப்பெரியாரைப்பற்றி எனக்கேற்பட்டுள்ள ஐயம் இதுவாகும். சுவாமிகள் சகம் 1647-ல் அதாவது கி. பி. 1725-ல் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் இயற்றி அரங்கேற்றியதாக அறியக் கிடக்கிறது. இதனை,

"இலகுசக னீரெட்டு நூற்றுநாற் பத்தேழி
னிற்கரங் கும்ப மிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதிகை
யோர்கவுல வஞ்சுப் பிரம்
கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்
கலைசைப் பதிக்குள் வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீதுபிள் ளைத்தமிழ்க்
கவிபாடி வாஞ்ஞே ருண
அலைமலி கடற்கடைந் தமிழ்நாட்டு மாலென்ன
வவனியிற் புலவர் செவியால்
ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞான தேசிக
னரங் கேற்றி னுனல்
நலசுகுண மணிகுவளை யணிபுயன் வீரப்ப
னல்கு மகராச யோகன்
நங்கள் கேசவபூபன்.........சேய்சுற்றமு
நன்மைதரு வாழ் வுறுகவே"

என்னும் செய்யுளால் அறியலாம். (இந்துதியாலஜிகல் யந்திர சாலையில் விரோதி௵ இடபமதியில், பாண்டித்துரைத் தேவர் விரும்பியபடி ஞானசம்பந்தம் பிள்ளை வெளியிட்ட "சிவஞான யோகிகள் அருளிச்செய்த பிரபந்தத்திரட்டு" என்னும் புத்தகத்தில் செங்கழுநீர் விநாயகர்பிள்ளைத் தமிழின் சிறப்புப் பாயிரம் காண்க.)

இச் செய்யுளின் கணக்குப்படி சகம் ஆண்டு 1647-ஆகிறது. அதாவது கி. பி. 1725-ஆகிறது. முனிவரர் சிவநிலைபெற்றது நாம் மேலே கூறியபடி கி. பி. 1785-ஆகும். இக் கணக்குப்படி

கணிப்போமாயின் சுவாமிகள் பரிபூரண மடைவதற்கு அறுபது ஆண்டுகட்கு முன்னர் ஷை செங்கழுநீர் விநாயகர்பிள்ளைத் தமிழை இயற்றினார் என்று ஏற்படுகிறது. அங்ஙனமாயின், சுவாமிகள் எண்பது ஆண்டு உயிர் வாழ்ந்தவராதல் வேண்டும். நாம் பெரியோர்களைக் கேட்டதில், சுவாமிகள் இளமையிலேயே அதாவது சு௯ அல்லது சஙு ஆண்டில் இறைவனடியடைந்த தாகக் கேள்விப்படுகிறோம். இச்செய்தி உண்மையா யிருக்கு மானால் சுவாமிகள் கி. பி. 1740-ல் பிறந்தவராதல் வேண்டும். அங்ஙனமானால், சுவாமிகள் கி. பி. 1725-ல் எங்ஙனம் பிள்ளைத் தமிழ் பாடியிருத்தல் கூடும்? எனவே, சுவாமிகள் சஙு ஆண்டு தான் உயிர் வாழ்ந்திருந்தனர் என்னும் பெரியோர் வழக்கு பொய்ம்மையுடைத்தா அன்றி எண்பது ஆண்டுக்குமேல் வாழ்ந் திருந்தனர் என்று கருதுவதா அல்லது "இலகு சக னீரெட்டு" என்னும் செய்யுளில் பாடபேதமிருக்கும் எனக் கொள்வதா அல்லது அப்பாட்டிற்கு வேறுவகையாகப் பொருள் கொள்ளவேண்டுமா? என்னும் ஐயங்கள் எனக்குத் தோன்றி யுள்ளன.

ஸ்ரீமத். சுவாமிகளின் மாணவர் பன்னிருவர் என அறிகி றோம். யாம் ஆராய்ந்து தொகுத்தவரையில் பதினொருவரே காணப்படுகின்றனர். பன்னிரண்டாவது மாணவர் இன்னா ரென்பது இன்னும் எமக்குப் புலப்படவில்லை. யாம் அறிந்த பதினொரு மாணவர் பெயரும் வருமாறு.

க. திருத்தணிகை கச்சியப்ப முனிவர் (கி. பி. 1790-ல் சிவகதி யடைந்தனர்.) உ. இலக்கணம் சிதம்பரமுனிவர். ௩. காஞ்சி. சிவசம்பு முனிவர். ச. தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர். ரு. காஞ்சி. முத்துக்குமாரசுவாமி தேசிகர். ௬. காஞ்சி. சரவணதேசிகர். அ. திருமுக்கூடல் சந்திரசேகரமுதலி யார். ௯. கடம்பர்கோயில் தானீகர் கலியாணசுந்தர உபாத்தி யாயர். ௰. காவந்தண்டலம் அடைக்கலங்காத்த முதலியார், கக. இராஜபாளையம் சங்கரமூர்த்திக் கவிராயர் (இவர், கன்னி வாடி ஜமீன்தார் மலையாண்டியப்ப நாயகரிடம் யானைக் கன்றும் வளநாடும் பரிசில் பெற்றவர்.)

சுவாமிகளின் கஉ-வது மாணவர் இன்னாரென்றும், அவர் இயற்றிய நூல் இவை என்றும் அறிந்த அன்பர்கள் செந்தமிழ்ச் செல்வி மூலம் அறிவிப்பதோடு "இலகுசக னீரெட்டு" என்னும் செய்யுள் காரணமாக ஏற்பட்ட ஐயத்தையும் நீக்கும்படி வணக் கத்துடன் வேண்டிக்கொள்கிறேன்.

மயிலை. சீனி. வேங்கடசாமி

மண நடை முறை. *

[திரு. எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள் B. A., L. T.]

தமிழகத்திற் பண்டைக் காலத்தில் ஆணும் பெண்ணும் தத்தங் கருமங்களை வீட்டிலும் வெளியிலுஞ் செய்து வந்தனர். அங்ஙனஞ் செய்து வந்தபொழுது ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டுக் கண்ணுற்று இசைந்தபின் தத்தங் காதலைத் தோழர் தோழிகள் மூலமாகவும், பொழுது கண்டிரங்கல், நாணுத்துறவுரைத்தல், உறுப்புநலனழித்தல் முதலான வழிகளிலும், தந்தை தாயாருக்கு அறிவித்து அவர்கள் ஒத்தபின் இருவரும் ஒன்று கூடி வாழ்ந்து செவ்வனே இல்லறம் நடாத்தி வந்தனர். ஆரியக் கலப்பு நிகழ்ந்தபின் பொய்யும் வழுவும் மல்கியதால் ஐயர் கரணம்† யாத்தனர்.

காதலரிசைந்தபின் இரு முது குரவரும் மனம் பொருந்தி மணவினை நிகழ்த்தினர். முகமதியர் காலத்திற் பெண்கள் வீடடங்கும்படி நேரிட்டது. காது வளர்த்து வந்ததும் அவராலேயாம். அதனால் ஆண் பெண்ணைப் பார்ப்பதற்கின்றித் தோழமை இன முறையாற் பார்வையிடப்பட்டு இருமுது குரவரும் இணங்கிய பின் பெரியோர்களால் மணங் குறிக்கப்பட்டு நிகழும். ஆரிய மக்களுக்குள் தாலி கட்டும் வழக்கமின்றிக் கைப்பிடித்தலே முக்கியமாகக் கருதப்பட்டது. தமிழ் மக்களைப் பார்த்து ஆரியரும் புலிப்பல் தாலி கட்டத் தொடங்கினர். அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில்,

> “ வரையரையன் திருமடந்தை வனமுலைமேல் மணிக்குன்றி
> வடமும், செங்கை
> நிரைவளையும் புலிப்பல்லால் நிறந்திகழ் மங்கலப் பூணும்
> நிலவ ”

என்று வில்லிபுத்தூரர் கூறியுளார். சிறுமியர் மண நிகழ்ச்சியின் முன்னர் அணிந்திருந்த ஐம்படைத் தாலியை நீக்கி மங்கல சூத்திர மணியும் வழக்கம் ஏற்பட்டது எத்துணை வறுமை வரி

---

† “ பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப ”
ஐயர்—முனிவர்; கரணம்—வேள்விச்சடங்கு.

* இது, ‘தமிழராட்சி’ என்னுங் கிழமை வெளியீட்டிலிருந்து எடுக்கப்பட்டது.

னும், இச் சூத்திரத்தைக் கழுத்தினின்று கழற்றும் வழக்கமில்லை யாதலால், "ஈகை யரிய இழை யணி மகளிர்," என்பாருமுளர். சூரியசந்திரர்க ளறியத் தாய்தந்தையர் முதலான உரிமையாளர் மணமக்களைக் கொடுத்தலும் பெறலுமே வழக்கமாயிருந்தது. கொடுத்தற் கடையாளம் தாரை வார்த்தலும் காதலர் ஒருமைப் பட்டதற்குக் கைப்பிடித்தலுந் தாலி கட்டலும் நிகழ்ந்தன. "கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை" என்பது பின்னர் மனக்கிழத்திக்கு ஏற்பட்டது. கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை வழிபடுமாறு இதுவென்றும், இரு முதுகுரவர் கற்பித்தலானும் இல்லறம் நடாத்தும் வகையைத்* தலைமகன் கற்பித்தலானும், அவற்றை விலகாமல் நடத்தலே கற்பெனப்பட்டது.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர்† கொடுப்பக் கொள்வதுவே.

மணம் நான்கு நாட்களிருந்ததென்று துலங்கும். முதனாள் தண்கதிர் செல்வர்க்கும், இடை நாள் கந்தருவருக்கும், பின்னாள் நெருப்புக் கடவுளுக்கும் அளித்து, நான்காம் நாள் நெருப்புக் கடவுள் மணமகளை மணமகனுக்குக் கொடுப்பதாக வழக்கமுளது. இடைநாள் கந்தருவருக்கு அளிக்குமுறை நின்றமையால், மணம் மூன்றே நாள் நிகழ்ந்தது. சந்திரனுக்கும் அக்கினிக்கும் அடையாளமாக விளக்கு ஏற்றி மணம் நிகழுமிடத்தில் வைத்தல் வழக்கமாதலால் மண நிகழ்ச்சி ஒரே நாளில் அமைத்தல் வழுவாகாது. கண்காணுந் தெய்வத்திற்கு அறிகுறியாகிய சந்திர சூரியர்களுக்குப் பதிலாக ஏற்றிய விளக்கு முன் மதி நுட்பமும், ஆன்ற கல்வி கேள்வியும், பண்பும், உலக வியற்கையறிவும் பொருந்திய சான்றோர் ஒருவர் குறித்த நாட்காலையில் குளித்து முழுகி மணவாடை தரித்துவரும் மக்கள் இருவர்தங் கடமையும் பொறுப்பும் இவையெனத் தெளிவாகத் தனித் தமிழிற் கூறி, மரபினர் கொடுக்க, ஒருவரை ஒருவர் ஏற்று, அதற்கடையாளமாக மங்கலத்தைப் பூணச்செய்து, கைப்பிடித்து, பெரியோர் வாழ்த்து கூற, கீதம் நிகழ, குழுமிய அனைவருடன் ஊர்வலம் வந்து, வீடுபுகுந்து விருந்துண்டு, இனியவை கேட்டல்;—இவை மணச் சடங்குகள் எனக் கூறலாம். தாலி கட்டுவதற்கென்று அளவிறந்த பொருளை இறைத்துப் பின்

* "நற்பா லொழுக்கமும் மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதில், விருந்து புறந் தருதலும் சுற்ற மோம்பலும் பிறவு மன்ன."

† தாயொடு பிறந்தாரும் ஆசானும் கொடைக்கு உரிய மரபினர்.

துயருறுதல் தற்கால நடையாகவிருப்பதை ஒழித்து, வருவாய்க்குத் தக்கவாறு மணத்தை நிறுவுதல் அறிவாளர்க்கு அழகு.

மணத்தை நடாத்தும் சான்றோர் செய்கை

சான்றோர் காலையிலெழுந்து நீராடிக் கடவுளை வணங்கி, மணவினை நிகழுமிடத்திற்கு ஏகி, அவண் விளக்கு ஏற்றிவைக்கச் செய்து, மணமக்களுக்குப் போதிக்குமுறை இத்தகைத்தாம்.

மணமகனை நோக்கிக் கூறல்

"ஐய, அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை யாதலால், உம் ஆயுள்வரை ஒழுக்கந் தவறாமல் அறவழி நின்று, உம்மையே கதியென்று கருதித், தாய் தந்தை இனத்தை விட்டு உமக்கு வாழ்க்கைத் துணையாக வந்துள்ள மங்கையை நீர் அன்புடன் ஏற்று, நன்றுவரினும் தீதுவரினும் விலகாது பாதுகாத்து நுகர்ந்து மக்களைப் பெற்று வாழ்ந்து, வழி வழி பெருகுக."

மணமகளை நோக்கிக் கூறல்

"நங்காய், தவஞ்செய்து உன்னைப்பெற்று அன்புடன் நாளொரு மேனியாக வளர்த்து, அணியுமாடையு மளித்துத் தக்கவரனைத் தேர்ந்து இந்நாளில் அவரிடம் உன்னை ஏற்பிப்பதால் நீ மனைத்தக்க மாண்புடையளாக், கொண்டான் வளத்துக்குத் தக்கவாறு இல்லறம் நடாத்தி நிறைகாத்து எந்நாளுங் கொண்டானைப் பேணி, அவனுடன் கூடி, அறிவும் பண்புஞ் செறிந்த மக்களைப் பெற்று மனைக்கிழத்தியாகி, நீ வழி வழி சிறக்க."

மரபினர் அன்பொடு அளிக்க மங்கலநாண்பூட்டி மாலையணிந்து கைப்பிடித்த பின் இருவரையும் நோக்கிக் கூறல்:—

"மண மக்களே! நீவிரிருவரும் அபேதமாய் இணைபிரியாமல் வழிபட்டு, மனவெழுச்சியுடன் திருமகளுஞ் செல்வமும்போலும் உடலும் உயிரும் ஒப்ப, மலரும் மணமும் நிகர்த்து, நீரும் பாலும் போன்று, மணியும் ஒளியுமொத்து, ஒருமைப்பட்ட மனத்தினராய், நற் சந்ததி பெருகிப் பல்லாண்டு வாழ்வீராக. சுபம்."

இவ்வாறு ஒரேநாளில் தனித்தமிழில் மணம் நிகழ்த்திஞல் தலைமகளுந் தங்கள் கடமைகளைச் செவ்வனேயறிந்து பிணக்கம் இல்லாமல் பொருட் சேதமின்றி இன்புற்று வாழ்வர். எல்லாம் வல்ல இறைவன் தமிழக மக்களுக்கு அறிவு கொளுத்துவாராக.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

தமிழாசிரியர் தழுவிய ஆரியமொழி வேதங்கள்

[மறைமலையடிகள்]

(எசுஅ-ம் பக்கத்தொடர்ச்சி.)

யாம் கூறும் இவ் வுண்மை ஆரியவேதங்களை எழுத்தெண்ணிக் கற்று அவற்றின் இயல்பை நடுநின்று உள்ளவாறறிந்து உரைப்பாரான ஐரோப்பிய அமெரிக்க ஆசிரியர்கள் ஆராய்ந்து உரைத்திருக்கும் உரையினாலும், தெற்றென விளங்காநிற்கும். மேற்காட்டிய ஆசிரியர்கள் எம் நாட்டவர்கள் அல்லாமையானும், எம்முடைய சமயக் கொள்கைகள் ஒன்றிற் சார்ந்தவர்கள் அல்லாமையானும், எம் நாட்டவர் தத்தங்கொள்கைகளுக்கேற்ப ஆரிய நூற் பொருள்களைத் திரித்துக்கொள்வதில் முனைத்து நிற்குமாறுபோல அவர்கள் நில்லாமல், அவற்றின் உண்மை எதுவென்று ஆராய்வதிலேயே தமது கருத்தை அவர்கள் செலுத்துதலானும், மேனாட்டார் கூறும் பொருள்களே மூலத்துக்கு இயைந்தனவாய் இருக்கின்றன. எம் நாட்டவருள்ளும் ஆரிய நூற் பொருள்களை நடுநின்று ஆராய்ந்த உரோமேஷ் சந்தரதத்த முதலான பேரறிவாளரும் அவ் வைரோப்பிய ஆசிரியர் கூறும் பொருள்களோடு பெரிதொத்து மொழியாநிற்பர். இந்நடுநிலையாளர் அனைவரும் உருத்திர வணக்கம் ஆரியர்க் குரியதன்றென்றே ஒருமுகமாய் நின்று கட்டுரைத்தல் பெரிதும் நினைவிற் பதிக்கற் பாலதாகும். பண்டை ஆரியமக்களின் இனத்தவராகிய பாரசிகர் கிரேக்கர் உரோமானியர் முதலாயினாரெல்லாம் வணங்கிய சிறு தெய்வ வணக்கங்கள் பெரும்பாலும் ஒத்திருத்தலும், அவ்வணக்கங்களுள் உருத்திர வணக்கம் ஒரு சிறிதும் காணப்படாமையுமே இதற்குச் சான்றாம். இவ் வுண்மையை **வேளாளர் நாகரிகம்**, **மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்** என்னும் எம்முடைய நூல்களில் மிக விரித்து விளக்கியிருக்கின்றேமாகலின், அதனை அங்கே கண்டுகொள்க.

ஆசிரியர் தொல்காப்பியனார், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் முதலான பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரின், மெய்க்கோட்பாட்டினையே கடைப்பிடித்து அம்மரபிற் பிழையாது வந்தவரான சைவ சமயாசிரியன்மார் நால்வரும், முழுமுதற் கடவுளாகிய பிறப்பிறப்பில்லாச் சிவபெருமான் ஒருவனையே வழிபடுங் கடப்பாட்டில் தினைத்துணையும் வழுவாது தலைநின்றோராவர். இது,

" கைச்சிறு மறியவன் கழலலால் பேணுக்
கருத்துடை ஞானசம் பந்தன் " (அச்சிறுபாக்கம், கக)

எனத் திருஞானசம்பந்தப் பெருமானும்,

" சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம் "
(மறுமாற்றத் திருத்தாண்டகம், ௫)

என்று திருநாவுக்கரசு நாயனாரும்,

" பேணு தொழிந்தேன் உன்னையல்லால் பிறதேவரைக்
காணு தொழிந்தேன் " (திருப்புக்கொளியூர் அவிநாசி, ௮)

என்று சுந்தரமூர்த்தி நாயனாரும்,

" கொள்ளேன் புரந்தரன் மால்அயன்வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லால்எங்கள் உத்தமனே "

"புற்றில்வாழ் அரவும்அஞ்சேன் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன்
கற்றைவார் சடையெம மண்ணல் கண்ணுதல் பாதம்நண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டெனநினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக்கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே "

என்று மாணிக்கவாசகப் பெருமானும் கட்டுரைத்து அருளிச் செய்திருக்கும் அருளுரைகளை அறியும நல்லறிவுடையா ரெவ ரேனும் சிறு தெய்வ வணக்கப் பிதற்றுரைகளே பெரும்பாலும் நிறைந்த ஆரியப் போலி வேதங்களாகிய இருக்கு எசுர் சாம அதர்வங்களையே சிவபெருமான்றன் அருண்மொழிகளென்று எம் தெய்வ ஆசிரியன்மாராகிய திருஞான சம்பந்தர் முதலாயி னூர் கொண்டாரெனத் துணிந்து கூற முன்வருவார்களோ?

ஓராசிரியரது நூலுக்கு உரை செய்யப் புகுவோர் அவர் தம் கருத்தும் கோட்பாடும் நன்குணர்ந்தன்றே அதற்கு உரை செய்தல் வேண்டும். அவ்வாறின்றி அவ்வாசிரியரின் கருத்துங் கோட்பாடும் ஒருபுற மிருக்க அவற்றிற்கு முற்றும் முரணானவை களைக் கொண்டுவந்து நுழைத்து அவர் மொழிகளுக்குப் பொருள் பண்ணுவது எத்துணைப் பிழைபாடுடைய முறை யாகும். திருஞான சம்பந்தர் முதலிய எம்மாசிரியர் வேதங்கள் மறைகள் என்று சொன்ன சொற்களுக்கெல்லாம் இருக்கு முத

லிய நான்குமே எனப்பொருள் செய்யலுறுவார் எம்மாசிரியர் கருத்துக்குங் கோட்பாட்டிற்கும் அவ்வாரிய நூல்களில் உள்ள கருத்துக்குங் கோட்பாட்டிற்கும் ஒற்றுமை காட்டல் இன்றியமையாததன்றோ? எம்மாசிரியர் ஞான சம்பந்தராவது அல்லது அவர்க்கு முன்னும் பின்னுமிருந்த ஏனைத் தமிழ்ச்சான்றோராவது இருக்கு முதலான அவ்வாரிய நூல்களைப் பின்பற்றி இந்திரன், வருணன், அர்யமான், மாதரீஸ்வான் இயமவைவஸ்வதன், மித்ரன், தயஸ், பர்ஜன்யன், மருத்துக்கள், உஷாக்கள் அஸ்வினிகள், பூஷன் முதலான சிறு தெய்வங்கள் எதனையேனும் வணங்கி வழுத்துரை கூறியிருக்கின்றனரோ?

சோமப் பூண்டை நறுக்கிப் பிழிந்தெடுத்த கள்ளைக் குடங்குடமாகவைத்து இந்திரனுக்கு வழிபாடாற்றுதவர்களை இருக்கு வேதம் மிகக் கடிந்து வைதுரைக்குமாறு போலவும், எருமை மாட்டிறைச்சியும் சோமக் கள்ளும் மிகுதியாக வைத்துப் படைத்து இந்திரனைக் கொண்டாடுவோரை அது மிகப் புகழ்ந்துரைக்குமாறு போலவும் எம் தெய்வ ஆசிரியர்கள் எங்காயினும் இந்திரனை வணங்காதவரை வைதும் வணங்குவோரை வாழ்த்தியும் சொல்லியிருக்கின்றனரா? மேலும் அவ்விருக்கு வேத நான்காம் மண்டிலத்தின்கண்ணுள்ள நாற்பத்திரண்டாம் பதிகத்தில் வருணன் தானே கடவுளென்றும், தனக்கே எல்லாக் கடவுளரும் அடங்கினவரென்றும், தானே எல்லாவற்றிற்கும் உயிரைத் தருபவனென்றும் தன்னை மிகுத்துக் கூறுநிற்க, அதுகண்டு பொறுத இந்திரன் மற்றை எல்லாத் தேவர்களுடைய வலிமையெல்லாம் தன்னை அடக்க வல்லனவாகாவென்றும், தான் எவராலும் வெல்லப்படாதவனென்றும் கள்ளாலும் வணக்க உரையாலும் தான் களிப்புற்று மயங்கியவழி எல்லையற்ற உலகங்களிரண்டும் நடுங்குகின்றன வென்றும் தானும் மிகுத்துக்கூறித்தானே கடவுளாதலைக் கூறுமாறுபோலத் தமிழ்ச்சான்றோர் நூல்களில் எங்காயினும் இந்திரனுக்கும் வருணனுக்குந் தம்மில் யார் கடவுளரென்ற வழக்கு நிகழ்ந்தமை காட்டப்பட்டிருக்கின்றதோ? இந்திரன் தன் தந்தையை அவன் கால்களைப்பற்றிச் சுழற்றிக் கீழே அடித்துக்கொன்றமையும் அவன் பசியால் வருந்தியபோது நாயின் குடர்களைச் சமைத்துண்டு பசி தீர்த்துக்கொண்டமையுங் கூறி இருக்கு வேதம் அவனை உயர்த்துப் பேசுதல்போல எம் தமிழ்ச் சான்றோர் நூல்களில் ஏதேனும் அவனை உயர்த்திப் பேசக் கண்டதுண்டோ? மற்று எம்மாசிரியர்கள் அவ்விந்திரனும் அவ்விந்திரனைப் போலவே பெருங் கடவுளராகப் பிற்காலத்து ஆரியப்பார்ப்பனராற் கொள்ளப்பட்ட நான்முகன் நாராயணன் முதலியோரும் இறந்துபடுஞ் சிற்றுயிர்களே என்று கொண்டன்றோ,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணல் எண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈச னொருவனே."

என்று வற்புறுத்து அருளிச் செய்வாராயினர்.

மேலும், யமி என்னும் பெண் தேவதை தன் தமையனாகிய யமனைப் புணர முயன்ற கதையும், பிரஜாபதி யென்னும் தேவன் தன் மகளைப் புணர்ந்த கதையும் இழிந்தோரும் அருவருக்கத்தக்க வகையாய் இருக்கு முதலிய ஆரிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளை யெல்லாம் 'சாதி வேற்றுமையும் போலிச சைவரும்' என்னும் நூலினும, 'மாணிக்கவாசகர் காலம்' என்னும் நூலினும விரித்து விளக்கி யிருக்கின்றேம. இத்துணை அருவருப்பான கதைகளையும் உயிர்க்கொலை, கட்குடி, சூதாட்டம், முதலான படுதீயொழுக்க நிகழ்ச்சிகளையும் பொதிந்து வைத்துள்ள இருக்கு முதலான ஆரிய நூல்களையோ தூய அருளொழுக்கத்திலும் ஒரு முழுமுதற் கடவுள் வழிபாட்டிலும் தலைநின்றவர்களான எம செந்தமிழ்த் தொல்லாசிரியர்கள் வேத மெனவும், அவற்றைச் சிவபெருமானே அருளிச் செய்தனனெனவும் உயர்த்து உரைக்க முன்வருவார்கள்? அவ்வாரிய நூல்களில் அருவருப்பான பகுதிகள் நிறைந்திருப்பினும், முழுமுதற் கடவுள் நிலையும் ஏனைச் சிற்றுயிர்களின் நிலையும் அவைதமமை மாசுபடுத்து நிற்கும் அறியாமைக் கறையைக் கழுவி அவன் திருவடியைச் சேருமாறும் சிறிதாயினும் அவற்றின் கட்சொல்லப்படுமாயின் அது பற்றியாவது நம்மாசிரியர்கள் அந்நூலினை உயர்த்துக் கூறினார்கள் என்று கொள்ளுதற்கு இடனுண்டாம். ஆனால் அத்தகைய நுண்ணறிவு விளக்கங்கள் ஒரு சிலவுங்கூட அந்நூல்களிற் காணப்படுகின்றில. இவ்வாறிருக்கக் கடவுளையும் உயிர்களையும் வீட்டின்பத்தையும ஆராயும் நுண்ணிய ஆராய்ச்சியையே முதன்மையாய்க் கொண்ட சைவ சித்தாந்தத்திற்கும், சைவ சித்தாந்த ஆசிரியர்க்கும் இவ்வாரியச் சிறு தெய்வ நூல்கள் விழுமிய வேதங்களாகக் காணப்படுமாறு யாங்ஙனம்? அறிவிற்குறைந்த மடவோர்களுக்கும் அவ்வாரிய நூல்களின் பொருள்களை எடுத்துக் காட்டினால் அவரும் அவை தம்மை வேதங்களெனக் கூற ஒருப்படார். அந்நூல்களைக் கற்றுணராதவரையே ஏமாற்றி இருக்கு முதலியனவே வேதங்கள் வேதங்களெனக் கரைந்து மருட்டலாம். ஆனால் அம்மருட்டுரைகள் அவற்றின் பெற்றிகண்ட தமிழாசிரியர்பால் தலையெடுத்து நில்லா. எனவே

எம் சமயாசிரியர்களாலும் ஏனைத் தமிழ்ச்
ஆரிய மொழி வேதங்களெனக் கொள்ள
எசுர் சாமம் அதர்வம் என்னும் ஆரிய மெ
பாட்டுகள் அல்லவென்பதூஉம், மக்களுயிர்
இம்மை மறுமை யொழுக்கங்களையும் வீட்டி
அறிவுறுத்தும் தெய்வத் திருக்குறளும்
தமிழ் மெய்ந்நூல்களோடு ஒத்த ஏனைப்
களேயாதல்வேண்டு மென்பதூஉம் இனி
அற்றேல் அத்தன்மையவாம் ஆரிய மொ
ெவனின், அவற்றையினி யாராய்ந்து காட்

நாடி என்னுஞ் சொல்

[திரு. மா. வடிவேலு முதலி

இந்நிலவுலகில் கடவுளால் அருளிச்
கள் பதினெண் வகைப்படுமென்பர்.
யுள்ளவை இரண்டென்பர். அவை: ெ
என்பன. வடமொழிக்குரியார் வட
மொழிக்குரியார் தெற்கிலிருந்தனர்.
மருத்துவ அறிஞர்கள் பலர் இருந்தன

இவர்களில் வடக்கிலிருந்தவர்கள்
நாடு, நகரம், காலம், தட்பம், வெப்ப
உடல் வன்மை, பழக்க வழக்கங்கள்
ஆங்குண்டாம் நோய்களுக் கேற்க, அ
களைத் தங்களுக்கு வழக்கமாகிய
களாக எழுதிவைத்திருக்கின்றனர்.

அவ்வாறே, தெற்கிலிருந்தவ
திருந்த நாடு, நகரம், காலம், தட்பட
உணவு, உடல் வன்மை, பழக்க வ
தழுவி, ஆங்குண்டாம் நோய்களுக்
முல்லை, நெய்தல், குறிஞ்சி, பா
ளால் கிடைக்கப்படும் மருந்துகளை
தென்மொழியிற் பல நூல்களாக

இவர்களில், வடக்கிலிருந்த
'சரகம்' எனவும்: சுஸ்ருதர் செய்
வழங்கப்படுகின்றன.

இவ்விருநூல்களையும் அம்
இவற்றில் நாடியைப்பற்றி ஒரு சி

நூல் செய்தவர்கள் மாத்திரம் சிற்சில நாடி
ள் நூல்களில் எவ்வாருகவோ நுழைத்து
ர். அவையும் பெரும்பாலும் பயன்படக்

ரோ பலப்பல வழிகளாக நாடி நடைகளைத்
ழுதிவைத்திருக்கின்றனர். அதை நோக்க,
டை காண்பதில் மிகப் பழக்கம் வாய்ந்தவ
ரு. அதை,

மெழுநடை கோழியா
த மெழும்பிடு மாமைபோல்
ஊர்ந்திடும் பாம்புபோல்
டறிந்தவர் சித்தரே.

ணியிடம் வாதமாம்
நன்றது பித்தமாம்
ழங்கிடு மையமாம்
துணர்ந்தவர் சித்தரே.''

களால் தெரிந்துகொள்ளலாம்.

ற்றல் ஒரு பாலுள்ளார் செய்த நூல்
ர்க்குப் பயன்படுவன வெனவும். ஒரு
ரு மொழி வந்ததெனவும், ஒரு மருத்து
மருத்துவம் வந்ததெனவுங் கூறுதல்
றிவாளிகள் அறிந்துகொள்ளாதிரார்

ழியிற் செய்யப்பட்ட நூல்களிலும்
முதலிய நாடி நடைகளின் விளக்கங்
ப்பட்டிருக்கின்றனவேயன்றி, நாடி
இல்லை. அவ் விளக்கம், வெளிவரா
நக்குமோ வென ஐயுறுதற் கிடமா
விளங்கவில்லை.

சதகம்'' என்னும் நூலில், நாடி
றப்பட்டிருக்கிறது. அது:

ரம்பிற் றுனே
துடிதா னல்ல
சத்ம மல்ல
ந்தா னல்ல

இயற்கைப்புணர்ச்சி

நாடியென்று லண்டபகி ரண்ட மெல்லாம்
நாடியெழு வகைத்தோற்றத் துள்ளாய் நின்ற
நாடியஃ தாராய்ந்து பார்த்தா ரானால்
நாடியுறும் பொருடெரிந்து நாடு வாரே."

என்னு மிச்செய்யுளா லறியப் பெறுவது.

இங்ஙனம், "நானுமறியேன் அவளும் பொய்சொல்லாள்" என்கிற முன்னோர் மூதுரைப்படி கூறின அவர், அவற்றைத் தடைவிடைகளான் பூர்வ பக்ஷம் பண்ணி உண்மையைச் சித்தாந்தப்படுத்தாமல் விட்டது தமிழ் மருத்துவர்களுக்குப் பெருங் குறையாயிற்று.

அக்குறைபாடு அடியா யிருப்பதாலும், "நாடி" என்னுஞ் சொல் பலபொருளொருசொல் ஆதலினாலும், "நாடியைச்" சிலர், 1. நரம்பெனவும்; சிலர், 2. அந்நரம்பில் துடிக்கின்ற துடியெனவும்; சிலர் 3. நாம் நாடிப் பார்த்தலினால் நாடியெனப் பேராயிற்றெனவும்; சிலர், 4. வாத, பித்த, சேத்மங்களெனவுங் கூறுகின்றனர். இவற்றுள்:

1. "நாடி" நரம்பென்பார் கூற்றின் ஆராய்ச்சி

"நாடி" என்பது நரம்பென்னில், அந் நரம்பானது ஆன்மா பிரிந்த பிணக்கிடையினும் உடலிலிருந்தும் பயன் படாமையானும்,

"நரம்பெனு நாடி யவற்றினுக் கெல்லாம்
உரம்பெறு நாடியொன் றுண்டு"

என்னுங் குறள்வெண்பாவால் நரம்புவேறு, நாடிவேறு என நன்கு விளங்கப்படுதலினாலும் நாடி நரம்பன்றென்றறிக,

2. "நாடி" நரம்பின் துடி என்பார் கூற்றின் ஆராய்ச்சி

"நாடி" என்பது நரம்பில் துடிக்கின்ற துடி என்னில், நரம்பு காரணமும், துடி காரியமுமாம். அங்ஙனமாயின்,

"கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி
வருதலால்"

என ஆன்றோர் செய்யுளிற் கூறியவாறே காரணமுள்ளளவும் காரியம் உடனிகழ்தல்வேண்டும். அவ்வாறின்றிப், பிணக்கிடையில் காரணமான நரம்பிருக்கவும், காரியமான துடி காணப்படாமையின் அத்துடி நாடியன்றென்றறிக.

3. நாம் நாடிப்பார்த்தலினால் "நாடி" எனப் பெயராயிற்றென்பார் கூற்றின் ஆராய்ச்சி

நாம் நாடிப் பார்த்தலினால் "நாடி" எனப் பெயராயிற் றென்னில், உடலினுள்ள உறுப்புக்களில் ஒவ்வொன்றும், அதனதன் தொழில் முதலியவற்றால் பெயர்பெற்றதன்றிப் பிறர் அதனதனிடத்துச் செய்யுந் தொழிலாற் பெயர்பெற்ற தன்று.

எங்ஙனமெனின்; முதல் அல்லது தலைமையான இடத்தி லிருப்பதால் அவ்விடத் துறுப்பு தலையெனவும், காணுந் தொழி லால் அது கண்ணெனவும், ஒலியைக் கதுவுந் தொழிலால் அது காதெனவும், முகருந்தொழிலால் அது மூக்கெனவும், வழியா யிருத்தலின் அது வாயெனவும், பக்கங்களிலிருத்தலின் அது கையெனவும், நடுவே யிருத்தலின் அது அகடெனவும், (வயிறு) கால் என்னும் எண்ணலளவுள்ள இடமான முழங் காலுக்குக் கீழிருத்தலின் அது காலெனவும், அரையென்னும் எண்ணலளவுள்ள இடமாயிருத்தலின் உடலின் நடுப்பங்கு அரை எனவும், உடலினுள்ள ஒவ்வோருறுப்பும் அதனதன் இடத் தாலும், செயலாலும், குணத்தாலும், அளவாலும் பெயர் பெற்றுள்ளதாலென்றறிக.

ஆகையால், "நாடி" என்பதும் அதன் செய்கையாலோ குணத்தாலோ பெயர்பெற்றிருத்தல் வேண்டும்.

அவ்வாறாகலின், நாடிப் பார்த்தலினால் "நாடி" எனப் பேராயிற்றென்பார் கூற்று அவலமாயிற்றென்றறிக.

ஆயினும், அங்ஙனமே கூறுவார், மேற்கூறிய வழக்கினை யும், இலக்கண தருக்கங்களையும் நன்குணராதாரென்பர்.

4. "நாடி" வாத, பித்த, சேத்மங்கள் என்பார் கூற்றின் ஆராய்ச்சி

"நாடி" என்பது வாத, பித்த, சேத்மங்கள் என்னில், உடம்பானது, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூத பரிணாமமென்ப. அவை: தொழிலில் பூதங்களென வும், தொழிற் பூதங்களெனவும் இருவகையின. அவற்றுள், பிருதிவி=மண், அப்பு=நீர், தேயு=நெருப்பு, வாயு=காற்று, ஆகாயம்=வெளி என்பன.

இவற்றின் தொழில்கள்:

"இரந்தர மாகி வான்று னிடங்கொடுத் திடுஞ்ச லித்தே
பரந்தவை திரட்டுங் காறீச் சுட்டொன்று வித்தல்பண்ணும்
நிரந்தரங் குளிர்ந்து நின்று பதஞ்செயு நீர்மண் டானும்
உரந்தருங் கடின மாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே."

என்னுமிச் செய்யுளால், பிருதிவி கடினமாதல், தரித்திடுதல், ஆகாயம் இடங்கொடுத்தல் ஆகியவற்றைக் கொண்டு, தாமசையா துண்மையின் இவை யிரண்டுந் தொழிலில் பூதங்களெனவும், அப்பு, தேயு, வாயு ஆகிய மூன்றும் முறையே குளிர்ந்து நின்று பதஞ்செய்தல், சுட்டொன்று வித்தல், சலித்துப் பரந்தவைகளைத் திரட்டல் முதலிய இயங்குஞ் செயல்களுடைமையின், தொழிற் பூதங்களெனவும் பெயர் பெறுவனவாம். இம்மூன்றே எல்லாக் காரியங்களுக்கும் பயன்படுபவை. இவை தொழில் பூதங்களே யாயினுந் தாமே இயங்கா. ஒரு கருத்தாவால் இயக்கப்படு வனவேயாம். இதை;

" இயல்பதாம் பூதந் தானே யியற்றிடுஞ் செய்தியென்னில்
செயல்செய்வா னொருவன் வேண்டுஞ் செயற்படுஞ் சேத னத்தால்."

" நிலம்புன லனல்கால் காண நிறுத்திடு மழிக்கு மாக்கும்
பலன்றரு மொருவ னிங்குப் பண்ணிட வேண்டா வென்னில்
இலங்கிய தோற்ற நிற்ற லீறிவை யிசைத லாலே
நலங்கிளர் தோற்ற நாசந் தனக்கிலா நாதன் வேண்டும்."

என்னுஞ் செய்யுள்களாலறிக.

இத்தொழிற் பூதங்கள் மூன்றில் வாயுபூதம் வாதமெனவும், தேயுபூதம் பித்தமெனவும், அப்பு பூதம் சீதளமெனவும் பெயர் பெறும். இதை;

"சேத்துமந் தண்ணீர் பித்தந் தீக்காற்று வாத மாமே."

என்பதாலறிக.

இவைகள் பரிணமப்பட்டுத் தங்கள் செயல்களாக மூவித மான பலவகை நோய்களை விளைவிப்பன.

ஆகவே இவைகள் முப்பிணி எனவும், முக்குற்றமெனவும் பெயர் பெறுவன. இங்ஙனமாதலே;

" மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று"

எனத் திருவள்ளுவரும்,

" வாதபித்த மஞ்சுமுதல்
நோய்களுக் கிசைந்தவபி
தானமெத்த வுண்டதனை
யாருரைப்ப ரிந்தமகி"

எனத்தேரரும் கூறியவற்றாலுணர்க.

இம் மூன்றும் பூதங்களாகலானும், தமக்கென ஒரு சுதந்தர மின்மையானும், தங்களை இயக்க ஒரு கருத்தா வேண்டப் படுதலானும் இவைகள் நாடி எனப்படா.

அங்ஙனமாயின், வாதநாடி, பித்தநாடி, சிலேஷ்ம நாடி எனப் பெயர் வழங்குதற்குக் காரணமென்னை? எனின், அவற்றை வாதமாகிய நாடி, பித்தமாகிய நாடி, சிலேஷ்மமாகிய நாடி, எனப் பண்புத்தொகையாகப் பொருள் கொள்பவரே அக்கேள்வி கேட்டற்குரியாரென்ப.

அங்ஙனங் கொள்ளின் பூதங்களே நாடி எனப்பட்டுப் பிரதிக்ஞாதோஷமுண்டாகும்.

ஆகையால், அவ்வாறு பொருள்கொள்வதை அறவே விட்டு, வாதத்தை உணர்த்து நாடி, பித்தத்தை உணர்த்து நாடி, சிலேஷ்மத்தை உணர்த்து நாடி, என வேற்றுமைப் புணர்ச்சி, இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் உடன்தொக்க தொகையாகப் பொருள்கொள்ளல் வேண்டும்.

அவ்வாறு கொண்டாலே வாத, பித்த, சிலேத்துமங்களாகிய மூன்று பூதங்களுக்கும் வேறாகவுள்ளது 'நாடி' என நன்கு விளங்கும். (தொடரும்)

இயற்கைப் புணர்ச்சி

[இளவழகனுர்]

காட்சி

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று ஒளிர்கின்றதே

திருச்சிற்றம்பலக்கோவையார்.

அழகு மிகுந்த தாமரைப் பூவினையும், சிறப்பு மிகுந்த நீலப்பூக்களையும், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தில்லைக்கண் உண்டாகிய

நிறம் மிகுந்த அழகிய குமிழம் பூவினையும், கோங்கின் அரும்புகளையும், செவ்விய காந்தட் பூக்களையுங் கொண்டு மேம்பட்ட தெய்வ மணம் மிகுந்த மாலை, ஒரு வல்லிக்கொடிபோல வளைந்து அன்னநடை பொருந்தி, அழகு மிகுந்த காமனது வெற்றிக்கொடியை யொத்து விளங்குகின்றதே ! ஆ, இவ்வியப் பெண்ணே ! என்பது இதன் திரண்ட பொருள்.

இது தலைமகன் தலைமகளை முதன் முதலிற் கண்டபோது வியந் தெண்ணியவாறு.

திரு - கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம் என்று உரை கூறினர். பேராசிரியர். தாமரை காவிகள் குமிழ் கோங்கு காந்தள் என்னும் செடிப்பெயர்கள் அவவவற்றின் பூக்களை உணர்த்தி ஆகுபெயர்களாய் நின்றன. முறையே அவைகள் மருதம், நெய்தல், முல்லை, பாலை, குறிஞ்சி என்னும் ஐந்து நிலங்களின் பூக்களுமா மாதலால், ஊடல், இரங்கல், இருத்தல், பிரிதல், புணர்தல் என்னும் ஐந்து ஒழுக்கங்களும் இங்குத் தலைவனுந் தலைவியும் தலைப்பட்டுக் கூடி மறைவதற் குட் குறிப்பாய் நிகழ்தலைக் குறிப்பாற் சுட்டியவாறாயிற்று. அன்றி ஐந் திணை யொழுக்கத்துக்குந் தலைமகள் உரியவள் என்பதைக் குறிப்பித்த வாறுமாம். தாமரை நெய்தல் குமிழ் கோங்கு காந்தள் என்னும் பூக்களால் தொடுக்கப்பட்ட மணமுள்ள மாலையொன்று காமனுடைய வென்றிக்கொடிபோல ஒளிருகின்றது என்பது இதன் கருத்து. பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை தலைமகளுக்கு உருவகம். எனவே விருமபத்தக்க மலர்ச்சியுடைய அவள் முகத்துக்குத் தாமரைப் பூவும், கருமையான சிறிய கண்களுக்கு நீலப்பூக்களும், நீண்டு மெலிந்து நிலைத்த சின்னஞ் சிறு மூக்குக்குக் குமிழம் பூவும், நுனி குவிந்த சிறு சிறு கொங்கைகளுக்குக் கோங்கின் அரும்புகளும், மெல்லியவாய் விரிந்த செவ்விய கைகளுக்குக் காந்தட் பூக்களும் உருவகமாமென்க. இக்கோவைச் செய்யுள் அப் பெண்ணரசியின் தலைமுதற் கால்களீறாகப் புனைந்துரை செய்கின்றது.

மற்ற உறுப்புக்களைவிடப்புணர்சசிக்குச் சிறந்ததான கொங்கைக்குக் கோங்கினரும்பு உருவகமாக வருதலால், அதற்கு மற்றைப் பூக்களுக்குப் போல அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கவேண்டிய தின்றாயிற்று. இனிப் பாலை நிலம் மற்ற நிலங்களைப் போலத் தனிநில மாகாமையால், அதனைச் சுட்டிவந்த கோங்கினரும்பும் அடைமொழி கொடுத்து மற்ற வற்றைப் போலச் சிறப்பிக்கப் படாததாயிற்று என்றலுமாம். ஐந்து திணைகளையும் ஒருமிக்கக் கூறினரேனும், இறுதியிற் குறிஞ்சித் திணை யையே நிறுத்திட்டாராதலால், அக்குறிஞ்சித் திணையே 'சொல்லின் முடிவின் அப்பொருண் முடித்தல்' என்னும் உத்திப்படி இங்குக் கூறப் பட்ட மூதன்மையான திணையாம் என்பதூஉம், மற்றைய நான்கும் இதனையே சிறப்பிக்கவந்த துணையான திணைகளாம் என்பதூஉம் பெறப் படும். ஆசிரியர் தொல்காப்பியனார் புணர்ச்சிக்குரிய வெளிப்படையான மெய்ப்பாடு "இருகையும் எடுத்தல்"* என்பாராதலால் அவ்வொழுக்க மாகிய குறிஞ்சித் திணையை இங்குக் கைகளுக்கு உருவகமாக வருங் காந் தண் மலர் குறித்துநிற்பது வியந்து மகிழத்தக்கது. 'உருவளர் காமன்றன் வென்றிக்கொடி' என்றது தலைமகளின் வேட்கை மிகுதியையும், அவன்

---

* தொல், மெய்ப்பாட்டியல், ௧௫.

ஆண்மை நெஞ்சத்தை இழுத்து வெற்றிகொண்ட தலைமகளின் பெண் மைத் தன்மையின் திறத்தையுங் குறித்தது. 'உருவளர் காமன்' என்றார், அவள் வடிவம் வளர்ந்தமைந்து முதிர முதிர அவள் அழகும் வளர்ந் தமைந்து முதிர்ந்து காட்டும் என்பதற்கு. முகம், கண், மூக்கு முதலாக இங்குக் கூறப்பட்ட உறுப்புகளால் நெஞ்சம் இழுப்புண்ட தென்றது அவ்வுறுப்புகளின் வாயிலாக ஒளிரும் பெண்மைத் தன்மை யாகிய சாயலழகினால் இழுப்புண்டதென்றற்கு. இவ்வுண்மையினை 'உறுப்புகளாலன்றி அவற்றின் வாயிலாக ஒளிரும் சாயலழகினால் தான் தலைமகன் நெஞ்சம் மயங்கிற்று' என்னும் பொருளில் ஓர் உறுப் பினையேனுங் கூறாது வெறும் இயல்நலங் கனிந்த அவள் சாயலழகி னையே வைத்து நாயனார்,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"*

என்று அருளிச் செய்தமையாற் றெளியலாம். 'மாலை' 'ஒளிர்கின்றதே' என்று இக்கோவைச் செய்யுளிற் காணப்படுஞ் சொற்பொருட் குறிப்பு களும் இது.

'ஈசர் தில்லை' என்றது இக்களவொழுக்கம் வீடு பேற்றினையும் விளை விக்கும் என்பதற்கு. பேராசிரியரும் இதனைக் 'களவொழுக்க மென்னும் பெயர் பெற்று வீடுபேற்றின் பயத்ததாய் அன்பினானிகழுகின்ற காமப் பொருள்' என்று நன்கு சிறப்பிப்பர் என்க.

இனித் தலைமகன் இங்ஙனமெல்லாம் தலைமகளைக் கண்ணுற்றுக் கண்ணுற்ற அந்த நேரத்திலேயே அதனை அடுத்து எண்ணும் ஏதொரு சிறு நினைப்பும் இல்லாதவனாய்த் தன்னிலை யிழந்து அவளோடு இசைவு பட்டமையும், அங்ஙனமே தலைமகளும் அத்தலைமகனைக் கண்ணுற்றுக் கண்ணுற்ற அந்த நேரத்திலேயே அதனை அடுத்து எண்ணும் ஏதொருசிறு நினைப்பும் இல்லாதவளாய்த் தன்னிலை யிழந்து அவனொடு இசைவு பட்ட மையுமே **இயற்கைப்புணர்ச்சி** யெனப்படும் சிறப்புடைத்தாம் என்று அறிதல் வேண்டும். இவள்பால் அன்புவைப்பது முறையாகுமா அல்லது முறையாகாதொழியுமா என்றும், அதற்கு அழகு, அறிவு, கல்வி, செல்வம் முதலியவற்றான் அவள் தகுதியுடையவள் ஆவளா அல்லது அவள் தகுதி யில்லாதவளாய் விடுவளா என்றும் இவ்வாறெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் ஆராய்ச்சிஅறிவும் ஆற்றலும் தலைமகளைக்கண்ணுற்ற அந்தத் தலைமகனுக்கு இருக்குமானாலும், அங்ஙனமே தலைமகளுக்கும் அவ்வெண்ணம் தலைமகனை நோக்கி இருக்குமானாலும், இங்ஙனம் இருவரும் தமக்குத் தாமே தம்மறி வால் ஆராய்ந்து செயற்கையாய்ச் சேராது அல்லது தமக்குள்ள சுற்றத் தார் அறிவால் ஆராய்ந்து அவர் சேர்க்கச் செயற்கையாய்ச் சேராது ஒருவரை யொருவர் கண்ணுற்றபோது அவர் இருவருடைய ஆராய்ச்சி யும் எண்ணமும் செயலும் நிகழாமலே அவை நிகழுதற்கு முன்பே முற்பிறப்புக்களில் தொன்றுதொட்டதாய் வரும் ஊழ்வினை இருந்த வாறு கடவுளருளால் அவர்தம் உள்ளம் இசைவுபடுதலால், இஃது இயற்கைப் புணர்சசி என்பதற்கு உரித்தாயிற்றென்க.

---

* திருக்குறள், தகையணங்குறுத்தல், ௧.

இறைவன் அம்மக்களை ஒத்த நிலையிலும் ஒரே இடத்திலும் பிறப்பித்து அவர்களை ஒன்று கூட்டுதலிலேயே கருத்துடையனாய் முயன்று நிற்ப, அவன்றன் விழுமிய திருக்குறிப்பை அறியாதும், ஆண் பெண் உயிர்கட்குள்ள இயற்கை யொற்றுமையையும் காதலையும் அவை தாம் பிறந்து உழன்றுவரும் உண்மை வரலாற்றையும் ஆராயாதும் இஞ்ஞான்று பெற்றோர் சுற்றத்தார் எனப்படுவோர், தம் பெண் மக்களுக்கும் ஆண் மக்களுக்கும் உரியரல்லாத, உண்மைக்காதலிசைவு இயற்கையே பொருந்தாத வேறு பிறரான ஆண்மக்களையும் பெண்மக்களையும் உறவு பணம் முதலிய தத்தம் நலங்களை நோக்கி வலிந்து தேடிக் கூட்டிக் கொண்டுவந்து ஆடு மாடுகளைப் பிணைப்பதுபோலச் செயற்கையிற் புணர்ச்சி செய்விப்பாராயினர். இஃது உண்மைக்கு மாறுபடுவதேயா மாதலால்,

> "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
> ஏதில் பிணந் தழீஇ யற்று *
> நிறைநெஞ்ச மில்லாதவர் தோய்வர் பிறநெஞ்சிற்
> பேணிப் புணர்பவர் தோள் †

என்று 'அன்பினல்லாதாரைத்தழுவியர் பிணத்தைத் தழுவியவராவர்; கற்பிழந்தவராவர்'என்னும் பொருளில் வரும் திருவள்ளுவர்தம் வாய்மையுரைக்கும் இலக்காயிற்றுகாண். உண்மையில் வேறொருவருக்கு உரிய பெண்மகளொருவளை அவள் பெற்றோ ருறவினர் முதலியோ ரறியாராய் உரியனல்லாத ஆண்மகனொருவனைத் தாம் வலிந்து தேடி அவனுக்குப் பல்லோரறியத் திருமணமே செய்து கொடுத்தாரானாலுங்கூட அவனும் அவளும் உண்மைக்கற்புடையோராய் விடுவரோ? வென்க.

ஆகவே இயற்கையே ஒருவருக்கொருவர் உரியவரான ஆண் பெண் என்னுங் காதன்மக்கள், ஒருவரை யொருவர் திடீரென்று கண்டு முன் பின் பார்த்துப் பழகியவரைப் போல மகிழ்ந்து உள்ளமும் உடம்பும் புணர்தலால், அவ்வியற்கை மக்கட் புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சியென்னும் பெயர் பெற்றதென்று கொள்க. அவர் முற்பிறப்புகளிலெல்லாம் பழகியவராதலால் இங்குக்கண்டபொழுது நினைந்து பார்க்கும் ஆராய்ச்சியறிவும் எண்ணமுமே யின்றித் திடீரென்று ஒருவருக்கொருவர் உள்ளம் வீழ்ந்துகொள்வரென்க. வேட்கை மிகுந்த இவர்கள் இயற்கைப் புணர்ச்சியை 'வீழும்' என்னுஞ் சொல்லாற்பெறவைத்துக்

> "கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழுந்
> திருநுதற்கு இல்லை இடம்" ‡

என்று கூறும் மிகுதிக்குக் காணத்தக்கது. மற்றையோர் கூட்டம் செயற்கைப் புணர்ச்சியதாம் என்பது.

---

* திருக்குறள், வரைவின் மகளிர், ௩
† ,, ,, எ
‡ ,, காதற் சிறப்புரைத்தல், ௩

மதிப்புரை

திருவாளர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் இயற்றப்பட்ட தமிழ் அமைப்புற்ற வரலாறு (How Tamil was built up) என்னும் மொழிநூலொன்றை யாம் பார்வையிட்டேம். இந்நூல் தமிழ் மொழிச் சொற்களை ஒரியையுபடக் கூட்டங் கூட்டமாய்ப் பகுத்து அவைதாம் ஏதுக்களாலேயே (காரணங்களாலேயே) இயன்றனவென்று விளக்கி அவற்றின் பகுதி வரலாறும், அப்பகுதியினடியாகச் சொற்கள் பல பிறந்திட்ட வரலாறும், அங்ஙனம் பிறந்திட்ட பொழுது சொற்பொருள்கள் வேறுபட் டியலுமாறும், பெயர்ச் சொற்களேயன்றி மற்றும் பிறசொற்கள் எழுந்த வரலாறும், அவை தம்மின் விகுதி வேற்றுமையுருபுகளும் காலங்காட்டும் இடை நிலைகளும் பெற்று முற்றாவும் எச்சமாவும் வியங்கோள் எதிர்மறை முதலியவாவும் ஆமாறும், அவற்றோடு பிறமொழிகளில் தமிழ்ச் சொல்லடிகள் பயிலுமாறும் ௱௪ - பக்கங்களிற் செவ்வையாகச் சுருக்கி விளக்கப்பட்டிருக்கின்றன, வரலாறு விளக்கப் பெற்ற சொற்கள் நூலினிறுதியில் அகர வரிசைப் படுத்தி 'அநுபந்த' மாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நூல் எழுதப்பட்டிருக்கும் முறையும் அதன் கருத்துக்களும் அறிந்து மகிழத் தக்கவை. தமிழிற் செவ்விதான மொழிநூல் இல்லாக் குறையை இஃது ஒரு வகையில் நீக்கிற்றென்றுங் கூறுதல் அமையும். Antique கடிதத்திற் பதிக்கப்பெற்று அழகிய கலிக்காக்கட்டிட முடையதாய்த் திகழுகின்றது. விலை ரூ, உ. தபாற்கூலி அண ௪. வேண்டுவோர் சுன்னாகம் இலங்கை வியாபார ஐக்கிய சங்கத்தார்க்கு எழுதுக.

பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களை இதழாசிரியராகவும், வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களை உதவியிதழாசிரியராகவுங்கொண்டு சைவசித்தாந்த மகா சமாஜத்தின் வெளியீடாக வெளிப்பட்ட சித்தாந்தம் என்னும் பெயரிய ஒரு திங்களிதழின் முதலிதழைப் பார்த்தேம். சைவசித்தாந்த சமாஜமென்பது மாப்பெரும் புலவராய்த் திகழும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிவேதாசலமென்னும் உயர்திரு மறைமலையடிகளால் இற்றைக்கு உஉ - ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. சமாஜம் முதன் முதல் அடிகளாற்றுவங்கி நன்கு நடத்தபட்ட உண்மை அப்போழ்து உடனிருந்து கண்டு மகிழ்ந்த உயர்திரு ஞானியாரடிகள் முதலான பெரியாரெல்லார்க்கும் செவ்விதின் தெரிந்த தொன்றாகவும், அதனைக் குறிப்பிடாது விட்ட அதன் பெற்றி இரங்கத்தக்கதாயிருக்கின்றது. அவ்வெளியீடு ராயல் உ௪ - பக்கங்களில் அரும்போறிஞர்களின் அரும்பெருங் கட்டுரைகளைத் தன்கட்கொண்டு வெளிவருகின்றது. சித்தாந்தத்துக்கென ஒரு வெளியீடு திறமான ஆசிரியர்களைக்கொண்டு வெளிவரப்பெற்ற சைவ மக்கள் அதனைப் போற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள். கையொப்பம் ரூபா 1 - 8. வேண்டுவோர் சைவசித்தாந்த மகா சமாஜ காரியாலயம் நெ. 92, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை என்னுமிடத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்க.

கும்பகோணம் தேர்த் திருவிழா.